


# உதயன்

சுடர் : 36 கதிர் : 119 | வியாழக்கிழமை | பங்குனி 12 ஆம் நாள் 25 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## கோரமாகிறது கொரோனா

# மூடப்பட்டது திருநெல்வேலி பொதுச்சந்தை!

யாழ்ப்பாணம், மார்ச் 25

திருநெல்வேலி பொதுச்சந்தையில் 24 வியாபாரிகளுக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து சந்தைத் தொகுதி மறு அறிவித்தல் வரையில் 19

# இலங்கைக்குள் கால்வைக்குமா ஐ.நா.சபை?

### இன்னும் முடிவில்லை என்கின்றார் கெஹலிய



கொழும்பு, மார்ச் 25

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக அதிகாரிகளை சாட்சியங்களைத் திரட்டுவதற்காக இலங்கைக்குள் அனுமதிப்பது தொடர்பில் இன்னும் முடிவெடுக்கப் படவில்லை. அது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் அறிவிக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். 19

## வடக்கில் நேற்று 44 தொற்று

யாழ்ப்பாணம், மார்ச் 25

வடக்கு மாகாணத்தில் மேலும் 44 பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை 19

## கொரோனாவால் முதியவர் சாவு

*வவுனியாவைச் சேர்ந்தவர்*

வவுனியா, மார்ச் 25

வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த முதியவர் ஒருவர் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக உயிரிழந்தார்.

குறித்த நபர் சுகவீனம் காரணமாக நேற்று வவுனியா மருத்துவமனையில் சேர்க் 19

## முதல்வர் மணிவண்ணனுக்கு கொரோனாத் தொற்று உறுதி

*பிரமுகர்கள் பலர் தனிமையில்*

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர், சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனுக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அவருடன் தொடர்பு 19

## ஜெனிவா விவகாரம் இன்று விசேட அறிவிப்பு

*வெளிவிவகார அமைச்சர் விடுப்பார்*

கொழும்பு, மார்ச் 25

ஜெனிவா விவகாரம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன நாடாளுமன்றத்தில் விசேட அறிவிப்பொன்றை இன்று விடுக்கவுள்ளார். இந்தத் தகவலை அவர் நேற்று உறுதிப்படுத்தினார். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இடம்பெற்ற வாக்கெடுப்பு, 19

முச்சந்தி முரளி



"இப்பிடி புத்தரை சாட்டா வைச்சு இன்னும் என்னென்னத்தை பிடிக்க பிளான் போடுகினமோ தெரியேலை பாருங்கோ"

## மரம் விழுந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 25

முல்லைத்தீவு முள்ளியவளை பூதன் வயல் பகுதியில் மரம் வீழ்ந்து 19

## மன்னாரில் உருக்குலைந்த சடலம் மீட்பு!

மன்னாரில், மார்ச் 25

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, கரிசல் காட்டுப் பகுதி 19

## வங்கிக் கணக்குகளுக்குள் ஊடுருவிப் பண மோசடி

*வவுனியா இளைஞன் கைது*

வவுனியா, மார்ச் 25

வங்கிக் கணக்குகளுக்குள் ஊடுருவி, பண மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில், வவுனியா இளைஞன் ஒருவர், குற்றப் புலனாய்வுப் 19

## விக்னேஸ்வரனை சிறை வைக்க குற்றப் புலனாய்வுப் பிரிவு முயற்சி?

கொழும்பு, மார்ச் 25

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தொலைக்காட்சி ஒன்றில் தெரிவித்த கருத்தை 19

## 'மனங்களில் புத்தரை தேடு மண்ணில் புத்தரை தேடாதே'

*உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் தொல்பொருள் ஆய்வுக்கு எதிர்ப்பு!*

கிளிநொச்சி, மார்ச் 25

பொதுமக்களின் கடும் எதிர்ப்புக்களால் கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் மேற்கொள்ளப்படவிருந்த தொல்பொருள் ஆய்வு நடவடிக்கைகள் நேற்று நிறுத்தப்பட்டுள்ளன. அந்த ஆலயச் சூழலில் தொல்பொருள் சின்னங்கள் இருக்கின்றன என்று தெரிவித்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளத் தொல்லி 19




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் நிலையம் யாழ்.போதனாவில் திறப்பு

சந்தேகங்களை இங்கு தீர்க்க முடியும்
பதில் பணிப்பாளர் சிறிபவானந்தராஜா அறிவுறுத்து



**யாழ்ப்பாணம், மார்ச் 25**
**வரலாற்றில் முதன்முதலாக புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் சிகிச்சை நிலையம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.**
**கொழும்பில் இருந்து வருகைதந்த புற்றுநோயியல் தடுப்பு நிகழ்ச்சி திட்டத்தின் தலைவர் திருமதி ஜானகி விதான பத்திரன இந்த நிலையத்தை திறந்துவைத்தார்.**

"இது வடக்கு மாகாண மக்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம்" என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ். சிறிபவானந்தராஜா தெரிவித்தார்.
உலகளாவிய ரீதியிலும் சரி, இலங்கையிலும் சரி இறப்புகளுக்கான காரணங்களில் இரண்டாவது இடம் வகிப்பது புற்றுநோய்.
அதனை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து தடுப்பதன் மூலம் புற்றுநோய் மூலமான இறப்புகளை கட்டுப்படுத்த முடியும். இந்த நிலையம் புற்றுநோயாளர்களுக்கான நிலையம் அன்றி புற்றுநோய் ஏற்படுவதற்கு முன்னரே அதனை ஏற்படாமல் தடுப்பதற்கு அல்லது அதன் ஆரம்ப நிலையிலேயே அதனை கண்டறிவதற்கான ஒரு நிலையமாக தொழிற்படும்.
இந்த நிலையம் வாரத்தில் 7 நாள்களும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும். பொது மக்கள் தங்களுடைய புற்றுநோய் சம்பந்தமான சந்தேகங்களை குறித்த சிகிச்சை நிலையத்துக்கு வருகை தந்து தெரிந்துகொள்ள முடியும். என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஜ20, 27)

# 'கப்' ரக வாகனம் விபத்து
## சாரதி படுகாயம்



முல்லைத்தீவு, மார்ச் 25
புதுக்குடியிருப்பில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த கப் ரக வாகனம் நேற்று அதிகாலை விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி படுகாயங்களுடன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
கடல் உணவுகளை ஏற்றுவதற்காக விசுவமடுவில் இருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது முள்ளிவாய்க்கால் பகுதியில் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை தூக்கத்தால், வாகனம் வீதியை விட்டு விலகி, தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. விபத்து குறித்து முல்லைத்தீவு பொலிஸார் விசாரணை நடத்தினர். (வ-19)

# சிறுவனை தீண்டியது விஷப்பாம்பு

சாவகச்சேரி, மார்ச் 25
வயல் வரம்பில் காணப்பட்ட புற்களை வெட்டச் சென்ற சிறுவனை (வயது 17) விஷப்பாம்பு தீண்டியதால் குறித்த சிறுவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த சிறுவனே சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

# வீட்டுத்திட்ட நிதியை வழங்கக்கோரி யாழில் கவனவீர்ப்பு போராட்டம்



யாழ்ப்பாணம், மார்ச் 25
வீட்டுத் திட்டத்துக்கான நிதியை முழுமையாக வழங்குமாறு கோரி யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.
போராட்டத்தில் ஈடுபட்டோர் கருத்துத் தெரிவிக்கையில்,
மானிப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டை ஜே/132 மற்றும் ஜே/133 கிராம அலுவலகர் பிரிவுகளில் 2018 ஆம் ஆண்டு முன்னைய அரசாங்கத்தால் ஏழரை லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது. அதில், இரண்டு கட்டங்களாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி மட்டுமே தற்போது வரை வழங்கப்பட்டுள்ளது.
அத்துடன், குறித்த பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அரைகுறை வீடுகளிலேயே வசித்து வருகின்றன.
இது தொடர்பாக அதிகாரிகளைத் தொடர்புகொண்டு கேட்டபோது அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்கள் மீது பழி போட்டுவிட்டு தப்பிக்கொள்கின்றனர் - என்றனர்.
இதே வேளை போராட்டத்தில் ஈடுபட்டோர் யாழ்ப்பாண மாவட்டச் செயலர், தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கான தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-20)

# நிறைமாத பசுவை வெட்டி கன்றை வீசிய பாதகர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 25
நிறைமாதப் பசு ஒன்றை இறைச்சிக்காக வெட்டிய இனந்தெரியாத குழுவினர், அதன் வயிற்றில் இருந்த கன்றுக் குட்டியை நாவாந்துறை சந்தைப் பகுதியில் வீசிவிட்டுச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.
வேறு இடத்தில் பசுவை வெட்டிவிட்டு, அதன் வயிற்றுக்குள் இருந்த கன்றுக் குட்டியை குறித்த பகுதியில் வீசிவிட்டுச் சென்றுள்ளனர்.
"இப்படியான ஒரு சம்பவம் முன்னரும் ஒரு தடவை நடந்துள்ளது. அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நேற்றைய விடயமும் கண்டுகொள்ளப்படாமலேயே விடப்படும்." என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (த-27)

# பஸ்ஸிலிருந்து வீழ்ந்தவர் சாவு!

பயணிகள் பஸ் ஒன்று சென்றுக்கொண்டிருந்த போது, பஸ்ஸின் பின்புற கதவிலிருந்து தவறி வீழ்ந்து, நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அதனையடுத்து குறித்த பஸ்ஸின் நடத்துநர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
பாணந்துறை - களுத்துறை வழித்தடத்தில் பயணிக்கும் பஸ்ஸில் குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. (த-இ)

# சகல மக்களினதும் உரிமைகளை ஐ.நா. தீர்மானம் உறுதி செய்கிறது

*அமெரிக்கத் தூதுவர் கருத்து*

கொழும்பு, மார்ச் 25
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானம், அனைத்து மக்களது உரிமைகளையும் உறுதி செய்கின்றது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.
நீதி வழங்குவதிலும், பொறுப்புக்கூறலிலும் இலங்கையின் தொடர்ச்சியான முயற்சிகளை ஐ.நா. சபையின் புதிய தீர்மானம் அங்கீகரித்துள்ளது. அவ்வாறே, இலங்கை அரசின் கடந்த கால ஆணைக்குழுக்களின் வாக்குறுதிகளும், பரிந்துரைகளும் நிறைவேற்றப்படாமல் போய்விட்டன என்பதையும் இந்தத் தீர்மானம் அங்கீகரித்துள்ளது. இலங்கை உறுதியான, அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்கிய ஓர் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமானால், கடந்த காலத்தின் வலி மிகுந்த விடயங்களுக்குத் தீர்வு காண வேண்டும். எல்லாப் பிரஜைகளதும் உரிமைகளை உறுதி செய்யவும் வேண்டும். ஐ.நா. தீர்மானத்துக்கான இணை அனுசரணை நாடு என்ற அடிப்படையில், இலங்கையின் நீண்ட கால அமைதி மற்றும் சுபீட்சத்துக்காக அமெரிக்கா அர்ப்பணிப்புடன்செயற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# திருமறைக் கலாமன்றின் தவக்கால நாடகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 25
திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் 'களங்கம்' தவக்கால நாடகம் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் மேடையேற்றப்படவுள்ளது.
தினமும் மாலை 4 மணிக்கும், மாலை 6.30 மணிக்கும் இரண்டு காட்சிகளாக அரங்கேறவுள்ள களங்கம் நாடகத்தின் ஒரு காட்சிக்கு 150 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். கொரோனாத் தடுப்பு சுகாதார நடவடிக்கைகள் இறுக்கமாக பேணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

## அரசியலுக்காக
# கண்ணை இழந்து விட்டேன் மகனை இழக்கத் தயாரில்லை

சந்திரிகா தெரிவிப்பு



**கொழும்பு,மார்ச் 25**

**நான் அரசியலுக்காக எனது தந்தை மற்றும் கணவரை மாத்திரமன்றி என் கண்களையும் இழந்து விட்டேன். இனி என் மகனையும் இழக்க நான் தயாராக இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.**

எனது மகனை அரசியலுக்கு அழைத்து வர நான் சதித்திட்டம் தீட்டுகிறேன் என்று சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை. நாட்டைக் காப்பாற்ற இளைஞர்கள் முன்வந்தால், எனது மகனும் தனது பங்களிப்பை வழங்குவார். அதற்கு எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கமாட்டேன் என்றே சமூக ஊடகங்களில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நான் கருத்தைப் பதிவிட்டேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# சு.க. – பெரமுன மோதல் முடிவு

அரசுடன் இணைந்து பயணிக்க தயார் என்கிறார் தயாசிறி

கொழும்பு,மார்ச் 25

தற்போது அரசுடன் எந்தவித பிரச்சினையுமின்றி நாம் பயணிக்கிறோம். இந்த அரசை மேலும் திறம்பட வழி நடத்திச் செல்வதற்குத் தேவையான உதவிகளை ஜனாதிபதிக்கு வழங்குவோம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும், இராஜங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொழிலாளர் சங்கத்துக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்டக் குழுவுக்கும் இடையிலான சந்திப்பு ராஜகிரியவில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

> உள்ளூராட்சித் தேர்தல்களில் தனித்து போட்டியிடவில்லை. என்றாலும், தேர்தலுக்குப் போட்டியிடுவதற்கு தகுதியானவர்களை நாம் தேர்ந்தெடுக்க வேண்டுமல்லவா. அதற்காகத்தான் விண்ணப்பிக்கும்படி கேட்டுள்ளோம்.

சந்திப்பின் பின்னர் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது, கடந்த காலங்களில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக இந்தச் சங்கம் தற்போது சுயாதீனமாகவே இயங்கி வருகிறது. தொழிலாளர் சங்கத்தினர் தமது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து எங்களுக்குத் தெளிவுப்படுத்தினர். எனினும், இது தொடர்பில் ஆழமாக ஆராய்ந்து முடிவுகளை எடுப்போம்.

உள்ளூராட்சித் தேர்தல்களில் தனித்து போட்டியிடவில்லை. என்றாலும், தேர்தலுக்குப் போட்டியிடுவதற்கு தகுதியானவர்களை நாம் தேர்ந்தெடுக்க வேண்டுமல்லவா? அதற்காகத்தான் விண்ணப்பிக்கும்படி கேட்டுள்ளோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பான ஜெனிவா பிரேரணைக்கு இலங்கைக்கு ஆதரவாக இந்தியா ஒத்துழைப்பு வழங்காமை பாதிப்பாகாது. எனினும், அவர்கள் எங்களுக்குத் துணை நிற்பார்கள்- என்றார். (க-இ)



## தீக்கிரையான குடியிருப்பில் தொடர்மாடி வீடுகளை அமைக்குக

எதிர்க்கட்சி கோரிக்கை

கொழும்பு,மார்ச் 25

கஜி மாவத்தையில் தொடர் குடியிருப்பு வீட்டுத் தொகுதி தீக்கிரையாகியுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கும் தொடர்மாடி வீடுகளை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வடகொழும்பு, மாதம்பிட்டிய கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட கஜிமாவத்தையில் தொடர் குடியிருப்பு வீட்டுத்தொகுதி தீக்கிரைக்கு உள்ளானமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார். தீ விபத்தில் 27 பலகை வீடுகள் தீக்கிரையாகியுள்ளன. புதிய வீடுகள் நிர்மாணித்துத்தர முடியாது. உரிய இடத்தில் மீண்டும் பலகை வீடுகளை அமைத்துக்கொள்ளுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனவே இவர்களுக்கு மீண்டும் பலகை வீடுகளை அமைத்துக் கொடுக்காது தொடர்மாடி வீடுகளை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்தன , இந்த பிரச்சினைக்குத் தீர்வு களைப் பெற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கும்- என்றார். (க-இ)

# அரசின் முறையற்ற திட்டத்தால் மக்களின் வாழ்வில் திண்டாட்டம்

எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 25

மக்கள் எதிர்பார்க்காத அளவுக்குத் தற்போது அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. வரிக் குறைப்புச் செய்ததும் அதன் நன்மை மக்களுக்குக் கிடைப்பதில்லை. அரசு இவ்வாறு மேற்கொள்ளும் முறையற்ற திட்டங்களால், மக்களே அவல நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு எதிர்க்கட்சி உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நிதி அமைச்சின் கீழ் இருக்கும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி(கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதி வரி குறைப்புச் செய்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அந்த வரிகுறைப்பின் நன்மை மக்களுக்குக் கிடைக்க வேண்டும். அல்லது அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்க வேண்டும். இரண்டும் இல்லாமல் இடையில் இருப்பவர்கள் நன்மையடைவதை ஏற்றுக் கொள்ள முடியாது. எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டை சந்தோசமாகக் கொண்டாடும் சூழல் தற்போது இல்லை. குறிப்பாக கடலை, பயறு உழுந்து போன்றவற்றுக்குத் தட்டுப்பாடு இருந்து வருகின்றது. மேலும் விவசாயிகளைப் பலப்படுத்துகிறோம் எனத் தெரிவித்துக்கொண்டு அரசு இறக்குமதிப் பொருள்களுக்குத் தடை விதித்துள்ளது. அதனால் தான் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டும். அவ்வாறு இல்லாமல் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாது.

எனவே நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவோ பொருள்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தவோ, அரசிடம் முறையான வேலைத் திட்டம் இல்லை. பண நோட்டுக்களை அச்சிட்டு பொருளாதாரத்தைப் பலப்படுத்த முடியாது. என்றார். (க-இ)

# வருமானம் இல்லாததால் தண்டம் அறவிடும் அரசு

முஜிபுர் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு,மார்ச் 25

தற்போது வருமானம் இல்லாமையால், சாதாரண வாகன உரிமையாளர்களிடமும், தண்டம் அறவிடும் நடைமுறையை அரசு ஆரம்பித்துள்ளது என்று எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நிதி அமைச்சின் கீழ் வரும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி(கட்டுப்பாட்டு ) சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசின் முறையற்ற பொருளாதாரக் கொள்கை காரணமாகவே பொருள்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளது. இதனால் புத்தாண்டுக் காலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலை இன்னும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

சீனி வரிக் குறைப்பால் அரசுக்கு 15.9 பில்லியன் ரூபா வருமானம் இல்லாமல் போயிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அப்போது அரசில் இருப்பவர்கள் எவரும் அது தொடர்பில் வாய் திறக்கவில்லை. ஆனால் தற்போது வாய் திறக்க ஆரம்பித்துள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் பதுளை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தைக் காரணம் காட்டி, வாகனங்களின் டயர்களைப் பரிசோதித்து, டயர் தேய்வடைந்திருந்தால் அதற்குத் தண்டம் அறவிடும் நடவடிக்கையை அரசு ஆரம்பித்துள்ளது.

கடந்த காலத்தில் ஒரு சில வகையான டயர்களை இறக்குமதி செய்ய அரசு தடை விதித்திருந்தது. அதனால் சில வாகனங்களுக்குத் தேவையான டயர் சந்தையில் விற்பனைக்கு இல்லாமல் போன நிலைமையே ஏற்பட்டது. என்றார். (க-இ)

**ஜனாதிபதித் தேர்தல் 2024**

# ராஜபக்சக்களிடையே கருத்து மோதல்கள்

## குமார வெல்கம தெரிவிப்பு



**கொழும்பு,மார்ச் 25**
**2024 ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் விவகாரத்தில் ராஜபக்சக்களுக்கு இடையே போட்டித்தன்மை காணப்படுகிறது. அமைச்சர் நாமல் ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கும் நிலைப்பாட்டில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளார். பொதுஜன பெரமுன வின் ஒரு சில உறுப்பினர்கள் பஸில் ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக களமிக்கும் நிலைப்பாட்டில் உள்ளனர். பஸிலுக்கு அதற்கான தகுதியில்லை.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.
அகலவத்தை பகுதியில் இடம் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவுக்கு அரசியல் அனுபவம் கிடையாது.
எனவே அவர் தற்போது இராணுவ அதிகாரிகளைக் கொண்டு சிவில் நிர்வாகத்தை முன்னெடுக்க முயற்சிக்கிறார். அவரது செயற்பாடுகள் அனைத்தும் தோல்வியடைந்துள்ளன. ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து ஒன்றரை வருடம் நிறைவு பெற்றுள்ளன. இதுவரையிலான ஆட்சி நிர்வாகத்தை நாட்டு மக்கள் புறக்கணித்துள்ளனர். இயற்கைக்கு எதிரான செயற்பாடுகளை அரசு முன்னெடுக்கிறது.
அரச அதிகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதி வசம் காணப்படும் போது, சர்வாதிகார ஆட்சி முறைமையே முன்னெடுக்கப்படும்.
இலங்கையில் தற்போது சர்வாதிகார ஆட்சிக்கான தன்மை காணப்படுகிறது. அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் ஜனாதிபதிக்கு வரையறையற்ற அதிகாரத்தை வழங்கியுள்ளது. ஆகவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இலங்கைக்குப் பொருத்தமற்றது. மாகாண சபை முறைமையும் இலங்கைக்குப் பொருத்தமற்றது. இந்தியாவால் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையைத் தொடர்ந்து முன்னெடுத்து செல்வதால் எவ்வித பயனும் நாட்டு மக்களுக்கு கிடைக்காது. என்றார். (க-இ)



## பெண்களின் சமூகமட்ட பங்களிப்பு பிரச்சினைகளை தீர்க்க வழிவகுக்கும்

*யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கோசலை மதன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 25
"சமூக மட்டத்தில் பெண்ணின் பங்களிப்பை உரிய முறையில் இனங்கண்டு அதற்கான தளங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் போது, பெண்களே தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை முன்நின்று தீர்க்கக்கூடிய நிலைக்கு மாறுவார்கள்" என்று யாழ் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை விரிவுரையாளர் கோசலை மதன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
பெண்ணானவள் சமூகத்தில் தான் சார்ந்து மற்றும் பிறர் சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப் படுகிறாள்.
உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண்களுக்கு 25 சதவீத ஒதுக்கீடு வழங்கப்பட்டமை வரவேற்கத்தக்க விடயமாக இருந்தாலும், கடந்த தேர்தல்களில் பெண்களை தேர்தல் அரசியலுக்குள் வலிந்து இழுத்து வரப்பட்ட சம்பவங்களே அதிகம் இடம்பெற்றன.
நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் திறமையான பல பெண் வேட்பாளர்கள் இருந்த போதும் கட்சிகள் தமது நிலைப்பாட்டை பிரதிபலிக்கக் கூடிய பெண் வேட்பாளர்களை அதிகம் தெரிவு செய்தார்கள் கட்சிகள் திறமையான பெண்களை தேர்தல் அரசியலுக்கு கொண்டு வந்தார்களா என்பதற்கு கட்சிகளே பொறுப்பு கூறவேண்டும்.
கட்சிகள் தமது சொற்படி கேட்கின்ற பெண் உறுப்பினர்களை தேர்தல் அரசியலுக்குள் வாங்கிய நிலையில் சமூகத்தில் சுயமாக சிந்தித்து முடிவுகளை எடுக்கக்கூடிய பெண் தட்டிக் கழிக்கப்படுகிறாள்.
ஆகவே சமூக மட்டத்தில் பெண்ணின் பங்களிப்பை உரிய முறையில் இனங்கண்டு அதற்கான தளங்களை உரியவர்கள் ஏற்படுத்திக் கொடுக்கும் போது பெண்களே தமது பிரச்சினைகளை முன்நின்று தீர்க்கக்கூடிய நிலைக்கு மாறுவார்கள்- என்றார்.(ஐ-20)

## முத்தையன்கட்டு குளத்தின் கீழ் 3,305 ஏக்கர் நெற்செய்கை

முல்லைத்தீவு, மார்ச் 25
முத்தையன் கட்டு குளத்தின் கீழ் 3 ஆயிரத்து 305 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையும், 4ஆயிரத்து 326 ஏக்கரில் உப உணவு செய்கையும் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
முத்தையன் கட்டு குளத்தின் கீழான சிறுபோக விவசாய செய்கைக்கான குளக்கூட்டம் மாவட்ட செயலர் க.விமலநாதன் தலைமையில் முத்தையன் கட்டு நீர்பாசன திணைக்கள அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன் போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. இதன் போது பிரதி நீர்பாசன பணிப்பாளர், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், பிரதேச செயலாளர், வனவளத் திணைக்களம், கமநலசேவை உதவிப்பணிப்பாளர் கிராம சேவையாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (வ-19)



முழங்காவில் மகாவித்தியாலய மாணவர்களின் நலன்கருதி, கண்டு அறக்கொடை நிதியத்தினரால், பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. (ந)



சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரி வுக்குட்பட்ட பயனாளிகளுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையினால் உணவுப்பொருட்கள் அல்லாத வெள்ள அனர்த்த நிவாரணப்பொருட்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரிவு அலுவலகத்தில் வழங்கி வைக்கப்பட்டன. (ய-20)

## புத்தாண்டுக்கு முன்னர் உயர்தரப் பெறுபேறுகள்

கொழும்பு,மார்ச் 25
2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை பெறுபேறுகள் தமிழ்- சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
வெளியாகும் பெறுபேறுகளின் அடிப்படையில், 2021 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்குள் மாணவர்களை பல்கலைக்கழகங்களில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

# முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு அசாத் சாலி உதவியுள்ளார்

## அறிக்கை சமர்ப்பித்தது சி.ஐ.டி.

கொழும்பு,மார்ச் 25
இலங்கை குடியரசின் இறையாண்மைக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு, முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, உதவியுள்ளமை தெரியவந்துள்ளது என்று குற்றப் புலனாய்வு பிரிவு நீதி மன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தது.
முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, பயங்கரவாதத் தடை சட்டம் மற்றும் குற்றவியல் சட்டங்களின் கீழ் குற்றப்புல னாய்வுப் பிரிவினரால் அண்மையில் கைது செய்யப்பட்டார்.
கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாகவே அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு அறிவித்திருந்தது.
இந்த நிலையில் மாவனெல்லையில் புத்தர் சிலைகளை இடித்த சந்தேகநபர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியுள்ளளார் என்று குற்றப் புலனாய்வு பிரிவு நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், தடுப்புக் காவல் உத்தரவில், அசாத் சாலி, 3 மாதங்கள் தடுத்து வைத்து விசாரிக்கப்படவுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆசை கொண்ட அரசும் குழம்பிய குட்டையும்

மீண்டும் தமிழர்களின் நிலத்தை விழுங்கும் கோரப்பசியோடு தன் வாயை அகலத்திறந்தபடி பேரினவாதம் குருந்தூரிலும், உருத்திரபுரத்திலும் அதன் ஆட்டத்தை ஆரம்பித்துள்ளது.


பசறையில் மலைச்சரிவால் பாதையில் வீழ்ந்து கிடந்த பாறையை மூன்று மாதங்களுக்கு மேலாக இந்த அரசாங்கம் அகற்றவேயில்லை. உடனடியாகச் செய்யவேண்டிய காரியமொன்றைச் செய்யாமல் அரசாங்கம் அசட்டை செய்ததால், அநியாயமாக 15 உயிர்கள் பலியாகியிருக்கின்றன.

கொரோனா தலைவிரித்தாடும் சூழலில் பல மருத்துவமனைகளில் சிகிச்சைக்குரிய வசதிகள் பற்றாக்குறையால், வெறுமனே தனிமைப்படுத்தலோடு இலங்கையில் கொரோனாவுக்கான சிகிச்சை மட்டுப்படுத்தப்பட்டதாகவும் ஒருசாரார் குற்றம் சுமத்துகின்றனர். இவையெல்லாம் அரசாங்கத்தின் செயற்றிறனின்மையை விளக்குவதற்கான, ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போன்றவையே. இவற்றை விட நாட்டில் உடனடியாகச் செய்யவேண்டிய அவசரமானதும், அவசியமானதுமான எத்தனையோ காரியங்கள் இன்னும் கிடப்பிலேயே உள்ளன. அவற்றைச் செய்வதற்கான எந்தவொரு எத்தனத்தையும் அரசாங்கம் காண்பிப்பதாக இல்லை.

அவசியமான காரியங்களைக்கூடச் செய்ய வக்கற்றிருக்கும் இதேஅரசாங்கம்தான், தமிழர் பகுதிகளில் தொன்மையான விகாரைகளின் எச்சங்கள் இருப்பதாகக் கூறி, உடனடியாக அங்கு அகழ்வுகளில் இறங்கியிருக்கிறது. குருந்தூரில் விகாரை இருந்ததாக அரசாங்கம் சொல்கின்ற இடத்தைச் சூழவுள்ள சுமார் 400 ஏக்கர் நிலப்பகுதியையும் சுவீகரித்து, அதனை ஒரு பௌத்த வலயமாக்கவும் அரசாங்கம் அதீத முனைப்புக்காட்டத் தொடங்கியுள்ளது. உருத்திரபுரத்தில், உருத்திரபுரீஸ்வரர் (சிவன்) கோயிலுக்கு அருகில் சிதிலமடைந்த நிலையில் உள்ள கட்டட இடிபாடுகளும் முன்னைய கால விகாரையே என்று அடுத்த கட்ட ஆக்கிரமிப்பு அங்கும் தொடங்கிவிட்டது. தமிழர் நிலங்களைச் சுவீகரிப்பதே , கொரோனா ஒழிப்பை விடவும், விபத்துகளைத் தடுப்பதை விடவும் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதை விடவும் அதிமுக்கியமான காரியங்களாக கோத்தாபய அரசாங்கத்துக்கு தெரிகின்றன போலும்.

அரச வாழ்வு உள்ளிட்ட அத்தனை ஆசைகளையும் துறந்ததாலேயே சித்தார்த்தன் என்ற இளவரசனால் கௌதம புத்தராக உயர முடிந்தது. ஆனால் அவரின் பாதையைப் பின்பற்றுவதாகச் சொல்லும் பௌத்த பேரினவாதிகள்,பேராசைகளின் ஒட்டுமொத்த வடிவமாக உருமாறி, தமிழர்களின் இருப்பிடங்களையும், சொத்துக்களையும் குறிவைத்தே காய்களை நகர்த்துகின்றனர். பிறர்மேல் அன்பு செய்வதையும் , பிற மதங்களை மதிப்பதையும், எவருக்கும் தீங்கில்லாமல் வாழ்வதையுமே புத்தரின் போதனைகள் திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றன. ஆனால் அந்தப் போதனைகளுக்கு எதிராக, புத்தரையும், புராதன விகாரைகள் என்ற கற்பனையையும் கேடயமாகப் பயன்படுத்தியபடி, நிலங்களை விழுங்கும் ஆசை கொண்டலைகின்றனர் பௌத்த பேரினவாதிகள். இவர்களின் இத்தகைய செயல்கள் தனியே அரசாங்கத்துக்கு மட்டுமல்லாமல், கௌதம புத்தருக்கும் களங்கத்தையே கற்பிக்கின்றன.

நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்துள் வீழ்ந்து கிடக்கையில், கொரோனாவால் இலங்கையரின் வாழ்வியற் கோலமே தலைகீழாக மாறிவிட்ட நிலையில் ,என்றுமில்லாதவகையில் வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ள தருணத்தில் அவற்றையெல்லாம் சீர் செய்வதை விட, இப்படி தமிழர்களின் காணிகளை அவசரத்தனமாக கையகப்படுத்தி எதைச் சாதிக்கப்போகின்றது இந்த அரசாங்கம்? விகாரைகளை அமைப்பதாலோ, தொல்பொருள்களைக் கண்டுபிடிப்பதாலோ, தமிழர்களின் நிலத்தை அபகரிப்பதாலோ இலங்கையின் ஒட்டுமொத்தப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடுமா? இல்லைவேயில்லை. மாறாக புதிய பிரச்சினைகள் தான் உருவாகும், மக்களிடம் இப்போதிருக்கும் அமைதியையும் குழப்பி, நாட்டையும் குழப்பி, அப்படிக் குழம்பும் குட்டைக்குள் அரசியல் ஆதாயம் என்னும் மீனைப் பிடிக்க நினைக்கிறது கோத்தாபய அரசாங்கம். யார் கண்டது, கடைசியில் அதே குழம்பிய குட்டையில் தான், ஆட்டம் போடும் அரசாங்கம் கவிழ்ந்து மூழ்கவும் கூடும்.



# நடுநிலைமையால் இலங்கையை இழந்து விட்டதாம் இந்தியா

## கூறுகிறார் சுப்பிரமணியன் சுவாமி

**கொழும்பு, மார்ச் 25**



**ஐ.நா. தீர்மானத்தின்போது இலங்கைக்கு ஆதரவு வழங்காமல் நடுநிலைமை வகித்ததன் ஊடாக இந்தியா, இலங்கை என்ற நண்பனை இழந்து விட்டது. இவ்வாறு ஆளும் பா.ஜ.க.வின் மூத்த அரசியல்வாதியும், ராஜபக்ச சகோதரர்களின் நெருங்கிய நண்பருமான சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.**

அவரது ருவிற்றர் பக்கத்தில், அமெரிக்க எழுத்தாளரான டேல் கார்னகியின் 'நண்பர்களை எளிதாகப் பெறுவதும் மக்களிடம் செல்வாக்குடன் விளங்குவதும் எப்படி?' என்ற புத்தகத்துக்கு எதிராக மோடியின் அரசு 'நண்பர்களை இழந்து எதிரிகளை எவ்வாறு ஊக்குவிப்பது' என்பது தொடர்பிலும் ஒரு புத்தகத்தை எழுத வேண்டும். மேலும் நாங்கள் நேபாளம், பூட்டான் மற்றும் இலங்கையை இழந்து சீனா மற்றும் பாகிஸ்தானுடன் இராணுவ கூட்டுப் பயிற்சியை ஊக்குவித்தோம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

# இந்தியா நடுநிலை வகித்தமை தமிழர்களுக்கு வேதனையே

## கருணாகரம் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 25



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்ற நிலையில் பல நாடுகளை திரைமறைவிலிருந்து இயக்கிய இந்தியா இப் பிரேரணை தொடர்பில் நடுநிலை வகித்தமை ஈழத்தமிழர்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கைக்கு எதிராக ஐ.நா.வில் கொண்டுவரப்பட்ட பிரேரணை அமோக வரவேற்புடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. 22 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாகவும் 11 நாடுகள் எதிராகவும் 14 நாடுகள் நடுநிலையாகவும் வாக்களித்துள்ளன. இலங்கையில் 'சிறுபான்மை இனத்தவர்கள் துன்புறுத்தப்படுகின்றனர், அவர்களுக்கு பூரண அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்று கூறிய இந்தியா, இந்த பிரேரணையில் நடுநிலை வகித்தமை ஈழத்தமிழர்களை வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

இந்த நிலையில் இலங்கையின் வெளியிறவுத் துறை அமைச்சர் மீசையில் மண் ஒட்டவில்லையென்ற வகையில் கருத்துகளை தெரிவித்து வருகின்றார். இதன் மூலம் இலங்கை அரசாங்கமும் அவர்களின் அமைச்சர்களும் யாதார்த்தத்தை புரிந்து கொள்ளாத நிலையிலேயே செயற்பட்டு வருகின்றனர் - என்றார். (ஐ)

# ஆதரவளித்த நாடுகளுக்கு பிரிட்டன் நன்றி

கொழும்பு,மார்ச் 25

இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவளித்த நாடுகளுக்கு, ஜெனிவாவுக்கான பிரிட்டனின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஜூலியன் ப்ரெய்த்வெய்ட் நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்பு தொடரும் என்றும் அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (க-இ)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 20 - 01 - 1942

இறப்பு 25 - 03 - 2020

அமரர் யோசேப் அலோசியஸ்

(அரியரட்ணம்)

கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின்
அவரோடு வாழ்வோம் என்பதே
நாம் கொண்டுள்ள நம்பிக்கை

வீமன்காமம் தெல்லிப்பளை

என்றும் மறவா நினைவுகளுடன் குடும்பத்தினர்


# பிக்குமாரின் தேர்தல் எதிர்ப்பு; தூண்டுதலின் பின்னணியில் அரசு

## உண்மையை அம்பலப்படுத்துகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மார்ச் 25
மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசு அஞ்சுகின்றது. அதனால்தான், பிக்குமார் ஊடாக தேர்தலுக்கு எதிரான கோஷங்களை இந்த அரசே எழுப்புகின்றது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குத் தயார் என்று கூறுகின்றது. நல்லாட்சி அரசின் காலத்தில் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தம் காரணமாகவே தேர்தல் பிற்போடப்படுகிறது எனக் காரணம் கூறுகின்றது.

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பணத்தைக் கொடுத்து 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிக் கொண்ட அரசுக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்டத் திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்வது ஒன்றும் கடினமாக இருக்காது.

ஆனாலும் அதனைச் செய்யாமல், பிக்குகள் ஊடாக மாகாணசபைத் தேர்தலுக்கு எதிரான நிலைப்பாடு தோற்றுவிக்கப்படுகின்றது. இதன் பின்னணியில் இந்த அரசுதான் இருக்கின்றது. தேர்தல் தோல்விப் பயத்தாலேயே அரசு மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் இருக்கின்றது - என்றார். (ஒ.இ)


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

நீங்காத நினைவலைகளில்...

31ம் நாள்



அன்னை மடியில் 10.07.1941

சொர்ண சித்தி விநாயகர் திருவடியில் 23.03.2021

அம்பலவாணர் சிவசுப்பிரமணியம் (வீரன்)

90ம் நாள்



அன்னை மடியில் 14.12.1941

சொர்ண சித்தி விநாயகர் திருவடியில் 28.11.2020

சிவசுப்பிரமணியம் இராஜேஸ்வரி

நாள்கள் பல ஓடி மறைந்தாலும் - எம் நெஞ்சில்
நிலைத்திருக்கும் பாசதீபம்
உங்கள் நினைவுகள் என்றும் அழியாது
இணைபிரியாத தம்பதிகளே

வானுறையும் தெய்வசந்நிதியில்
ஆன்ம ஈடேற்றம் பெற
இறையாசி வேண்டி அஞ்சலிக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும் பிள்ளைகள்


# புர்கா தடைக்கு நான் காரணமல்ல

## மழுப்புகிறார் சரத் வீரசேகர

கொழும்பு,மார்ச் 25
நாட்டில் புர்காவைத் தடை செய்யப்பட வேண்டும் என்ற பரிந்துரையை நான் முன்வைக்கவில்லை. எனக்கு முன்னர் பலர் இதனைக் கூறியுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை நடத்திய நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கையில், புர்கா தடை செய்யப்பட வேண்டும் என்ற பரிந்துரை இடம்பெற்றுள்ளது. இந்தப் பரிந்துரைகளை முன்வைத்தவர்களில் முஸ் லிம் அரசியல்வாதிகள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் உள்ளனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு மாத்திரமன்றி, ஜனாதிபதி ஆணைக் குழுவும் இதே பரிந்துரைகளை முன்வைத்துள்ளன.

அமைச்சரவையின் நிகழ்ச்சி நிரலுக்குள் இந்த அமைச்சரவை பத்திரம் உள்வாங்கப்பட்டு, விரைவில் கலந்துரையாடப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)


நீங்காத நினைவலைகள்

01ஆம் ஆண்டு



அமரர் திருமதி சிவபாக்கியவதி சாம்பசிவம்

திதி: துவாதசி

17ஆம் ஆண்டு



அமரர் திரு. கதிரவேலு சாம்பசிவம்

திதி: சதுர்த்தசி

09ஆம் ஆண்டு



அமரர் திரு. கணபதிப்பிள்ளை விக்னேஸ்வரராசா

(ஆசிரியர் யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி)

திதி: அமாவாசை

எமது குடும்பத்தின் அணையாத தீபங்களே!
பாசமுள்ள பெற்றோரே!
எங்களுக்கு உருக்கொடுத்து
உயிர்கொடுத்த தெய்வங்களே !
உங்களைப் போற்றி வணங்கி
ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பண்பான பாசமுள்ள என் அன்புக் கணவரே!
விதியின் சதியால் உம்மை இழந்து
காலமெல்லாம் கலங்குகின்றேன்.
மதிப்பான பாசமுள்ள எங்கள் அத்தானே!
உங்களது ஆளுமை எங்கே?
புன்னகை தவழும் வதனம் எங்கே?
ஊர் போற்றும் உத்தமரே!
பார் போற்ற வாழ்ந்தீரே!
பாதி வயதில் காலன் கவர்ந்தான்
உங்களது ஆத்ம சாந்திக்காக
செல்வவிநாயகப் பெருமானை
வணங்குகின்றோம்

25.03.2021
மாரீசன்கூடல்
இளவாலை

குடும்பத்தினர்.



# ஐ.தே.க. உறுப்பினர்கள் இருவர் இடைநிறுத்தம்

மொரவெவ மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேச சபைகளின், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் இரு வர் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இருவரும் கட்சியின் யாப்பையும், கட்சியின் ஒழுங்கு விதி முறைகளையும் மீறிச் செயற்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களான யாக்கூப் தம்பி ஜெனீதீன் மற்றும் ஆர்.எம்.எஸ்.விஜயசிங்க ஆகியோரே இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு அது தொடர்பிலான கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. கடிதத்தின் பிரதி தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# மணிவிழாக் காணும் துணைவேந்தரே பல்லாண்டு வாழி



## துணைவேந்தர்
## பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா
**B.Sc(Hons.-Jaffna), Dip.in.Ed(OUSL), PhD (Heriot-Watt)**

### மணிவிழாக் காணும் துணைவேந்தர்



பேராசிரியர்.சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா அவர்கள். ஒரு கணித மேதையாக யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வவுனியா உட்பட பல மாவட்டங்களில் கடமையாற்றி பல கணித விற்பனர்களை உருவாக்கியவர். ஏன் வெளி நாடுகளிலும் பணிபுரிந்து பல திறமையான மாணவர் களை உருவாக்கியுள்ளார். அவரின் அறிவியல் ஆழமோ அல்லது ஆன்மீக ஆழமோ அளவிடப்பட முடியாதவை. அவற்றினைப் பயன்படுத்தி ஒரு திறமையான மாணவர் சமுதாயத்தினை கட்டியெழுப்பியுள்ளார் என்பது நாம் எல்லோரும் பெருமைப்படவேண்டிய விடயமாகும்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நீண்டநாளாக முதுநிலை விரிவுரை யாளராக, பேராசிரியராகப் பணியாற்றி, எமது சமூகத்திற்கு தேவையான, சரியான நேரத்தில் துணைவேந்தர் பதவியினை சிறப்புத் தேர்வு அடிப்படையில் பெற்று, சிறப்பாகப் பணிபுரிந்து வருகிறார். பல சவால்களுக்கு மத்தியில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி எமது சமூக முன்னேற்றத்திற்கு உழைத்து வருகிறார்.

இன்று 25ம் திகதி, அறுபதாவது அகவையைக் காணும் பேராசிரியர். சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா அவர்கள் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

**இலட்சுமணன் இளங்கோவன்**
**செயலாளர்,**
**வடக்கு மாகாண கல்வி அமைச்சு**

### மணிவிழா நாயகர் - துணைவேந்தர் பேராசிரியர். சிவத்திரு. சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா அவர்கள்

பங்குனி 12ம் நாள் (மார்ச் 25) அன்று யோகர் சுவாமிகளின் குருபூசை நாளில் மணிவிழாக் காணும் துணைவேந்தர் பேராசிரியர்.சிவத்திரு.சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா அவர்கள், தென்னாடு அருள்மிகு மனோன்மணி அம்பாள் உடனுறை ஐம்பூதநாதரின் அருளாசிகளுடன் சீரும் சிறப்பும் பொருந்தி, நோய் நொடிகளின்றி, வையத்துள் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறோம். பெயரும் பதவியும் வந்தாலும், அன்பும் குணமும் அகலாத குணவான். உயர உயரப் பறந்தாலும் அடையாளம் அழியாமல் சிவ சின்னங்களுடன் நிமிர்ந்து நிற்கும் ஆளுமை பேராசிரியர். சிவத்திரு. சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா அவர்கள்.

இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும், அறிவாற்றலால் மாணவர்களையும், ஆளுமையால் நிர்வாகத்தினையும், நேர்மையால் வெற்றிகளையும், சைவத்தமிழ் தோய்ந்த உள்ளத்தால் அனை வரையும் வெற்றிகொண்டு வீறுநடைபோடும் பாங்கு பேராசிரியருக்கு மட்டும் உரித்தான தனித் தன்மை ஆகும். ஆழ்ந்த சிந்தனைத்திறன் மற்றும் கணித அறிவியல் கொண்டு சைவ நெறியை ஆராய்ந்து, அன்பே சிவம் என்ற திருமூலரின் வழியில் தனது அடையாளமாகிய சிவ நெறியை சரிவரப் பின்பற்றி அதன் வழி வாழ்ந்தும் வருகிறார். "சிவக்கொழுந்து" பெற்றெடுத்த மகனார் என்பது அவரின் தற்போதைய வாழ்வியல் நெறியில் வளர்ந்து நிற்கிறது. பெயருக்கேற்ற குணவான் பேராசிரியர் அவர்கள்.

அவரது பிறந்தநாளாகிய இன்று அவரை, வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்ற திருவள்ளுவரின் வரிகளுக்கு இணங்க, பல்லாண்டு காலம் வாழ்வாங்கு வாழ்கவென வாழ்த்தி, அவரின் அறிவியல் மற்றும் சிவநெறிச் சேவைகள் மென்மேலும் வளரவேண்டும் என்று எல்லாம்வல்ல பரம்பொருளாகிய சிவபெருமானிடம் விண்ணப்பம் வைத்து வணங்கி நிற்கிறோம்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
**தென்னாடு செந்தமிழாகம சிவமடம், கொக்குவில்.**

### மணிவிழாக் காணும் துணைவேந்தர்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மதிப்புயர் துணை வேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து- சிறிசற்குணராஜா அவர்களின் மணிவிழாவில் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக் களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். மாபெருஞ் சித்தரான சிவயோக சுவாமிகளின் குருபூசை நாளாகிய இன்று (25.03.2021) துணைவேந்தராக இருக்கும் காலத்தில் மணிவிழாக்காண்பதும் நடைபெறுவதும் திருவருட் செயலாகும். ஆஸ்திரேலியாவில் உள்ள நண்பர்கள் இவ் மணிவிழாவை நிகழ்த்துவது பாராட்டுதலுக்குரியதாகும். உலகிலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலேயே "இந்துக் கற்கைகள் பீடம்" என்ற பெயரில் ஒரு பீடம் இயங்கி வருகின்றது. இப்பீடத்தின் உருவாக்கத்திற்கு அர்ப்பணிப்புடன் உழைத்தவர்களுள் இவரும் முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கணிதவியல் பேராசிரியரான இவர், "இறைபணிநிற்றல்" என்ற மகுட வாசகத்தின் வழித் தடத்தில் அல்லும் பகலும் அயராது பணிபுரிந்து வருவது கண்டு மகிழ்தற்குரியது.

இவரின் அறிவு, ஆளுமை, அர்ப்பணிப்பு ஆகியவற்றால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மென்மேலும் உயர்வுபெற நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனும், யாழ் பல்கலைக்கழக பார்வதி சமேத ஸ்ரீ பரமேஸ்வரனும் திருவருள் பாலிக்க இறையருளை இறைஞ்சி, மணிவிழா நாயகர் "பல்லாண்டு பல்லாண்டு" வளத்துடன் வாழ வேண்டுமென வாயாற வாழ்த்தி அமைகின்றேன்.

**பேராசிரியர். டாக்டர் மா.வேதநாதன் (ஓய்வு)**
**மேனாள் தலைவர்,**
**இந்து நாகரிகத் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

### மணிவிழா நாயகனை மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்

25.03.2021 இல் 60 ஆண்டு நிறைவு காணும் மணிவிழா நாயகன் யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர். பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குண ராஜா அவர்களை இந்நாளில் வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றோம்.

காட்லியின் மைந்தன்! கல்வியின் சிகரம்!
அடக்கமாய் ! ஆளுமையுடன்
இனிதே செயல் முடிக்கும் வீரன்!

நிறைவாய் யாழ் - பல்கலைக்கழகத்தில்
பணிதருவான்!
தளம்பாத நிறைகுடம் இவன்
செயல் பெருமை தரும்!
பண்புடன் கருத்துரைக்கும்
கண்ணியத்தை வாழ்த்திடுவோம்!
பெருமகனார் புகழ் போற்றி
அகம் மகிழ்ந்து வாழ்த்திடுவோம்!

பேராசானே! இன்றும் நீ வளர்பிறையே!
ஒளிர் நிலவாய் பல்லாண்டு வாழியவே!
வடபுலத்தின் கலங்கரை விளக்காய்,
வழிகாட்டி வாழியவே!
மணிவிழா நாயகனை
மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

**பருத்தித்துறை**
**காட்லிக்கல்லூரி பழைய மாணவர்கள்**

### சைவமும் தமிழும் கண்களாய் வாழும் தனிப்பெரும் வேந்தன்



**பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா அவர்கள்**
**துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

துணைவேந்தராய் மணிவிழாக்காணும்
தூயவனே வாழி! வாழி!
தொடருறும் பணிகள் செய்யும்
சோர்விலாப் பெரியோய் வாழி!
இணையிலாக் கல்வியாளா
ஈடிலாக் கணித மேதை
இறைவனின் கருணை பெற்றோய்
என்றென்றும் வாழி! வாழி!

சைவமும் தமிழும் கண்களாய் வாழும்
தனிப்பெரும் வேந்தே வாழி!
ஐயங்கள் அனைவர்க்கும் நீக்கும்
அன்புறு பெரியோய் வாழி!
பொய்யிலா வேந்தே வாழி
புவனியில் பணியால் என்றும்
மெய்யுறு பெருமை பெற்று
மேனாளும் வாழி! வாழி!

**இலங்கை வாழ்,**
**சைவத் தமிழ் அபிமானிகளும்**
**தொண்டர்களும்.**

# பொய் தகவல்களை வழங்குதல்நேற்றைய கதையின் தொடர்ச்சி

## அங்கம் 4

நீங்கள் வேலைவாய்ப்பிற்காக அல்லது நிரந்தரமாக வதிவதற்காக வேண்டி வெளிநாட்டுக்குச்செல்ல விரும்புகிறீர்களா. தயவுகூர்ந்து உங்களினதும் உங்களின் நெருங்கிய உறவுகளினதும் பாதுகாப்பை பற்றி முதலில் அக்கறை எடுத்துக்கொள்ளுங்கள். வெளிநாட்டுக்கு செல்ல விரும்பினால் எப்பொழுதும் பாதுகாப்பான பாதையை தெரிவு செய்யுங்கள். இந்த சித்திரக்கதையில் ராஜாவுக்கு என்ன நிகழ்கின்றது என்பதை தொடர்ந்து அவதானிக்கும் போது பாது காப்பான புலம்பெயர்வை பற்றிய உங்களின் பார்வைக்கோணத்தை அதிகரித்துக்கொள்ள முடியும். இப்பத்திரிகையில் 7 நாட்களுக்கு தொடராக பிரசுரிக்கப் படவிருக்கும் சித்திரக்கதையின் 4ஆவது அங்கம் இதுவாகும். ஒவ்வொரு அங்கத்தின் இறுதியிலும் பரிசுகளை பெறும் வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளது.

**மனித கடத்தல்காரர்கள் பற்றி விழிப்புடனிருங்கள்! பாதுகாப்பான வெளிநாடு செல்லும் பாதையை தெரிவு செய்வதற்கு IOM நிறுவனத்தின் நேரடி இலக்கம் 0774410086 இற்கு அழையுங்கள்.**



தனது கனவை நனவாக்கிக் கொள்ள இலங்கையிலிருந்து விசிட் வீசாவில் வெளிநாட்டுக்கு வேலைக்கு செல்வதற்கு ராஜா தயாரானார்



அவர் நாட்டை விட்டு செல்வதற்கு முன்னர் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் தன்னை பதிவு செய்யவோ அர்னோல்ட் சட்டரீதியில் பதிவு செய்யப்பட்ட தொழில் முகவரா என ஆராயவும் இல்லை.



இறுதியில் ராஜா விசிட் வீசாவின் மூலம் இடைத்தங்கல் நாட்டினுள் பிரவேசித்தார்.



அங்கு அவரைப் போலவே விசிட் வீசா மூலம் அங்கு புலம் பெயர்ந்து வந்திருந்த இன்னும் சிலரை சந்திக்க நேர்ந்தது.



அந்நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில் பொய்யான காரணங்களை கூறி அகதி அந்தஸ்தை கோரும் படி அர்னோல்ட் ராஜாவுக்கு கூறினார்.



மேலும் அவ்வாறு பொய்யான காரணங்களை கூறி அகதியென தன்னை பிரஸ்தாபிப்பதன் மூலம் ராஜா வளர்ச்சியடைந்த நாடொன்றிற்கு செல்ல முடியுமென உண்மையற்ற விடையங்களை கூறி அர்னோல்ட் ஆசை காட்டினார்.

### வினா : ராஜா தொழில் முகவரின் அறிவுரைக்கமைய அகதி அந்தஸ்தை கோர முடியுமா?



விடை 1: பொய்யான தகவல்களை வழங்கும்படி புலம் பெயர்வோரை தவறாக வழிநடத்தி வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் பணத்தை பெற்றுக் கொள்வது சட்டப்படி குற்றமாகும். உண்மையற்ற ஆவணங்கள் அல்லது தகவல்கள் வழங்கப் பட்டிருப்பது தெரிய வந்தால் அத்தகைய புலம்பெயர்வோர் தமது நாட்டிற்கு திரும்பி யனுப்பப்படுவர்



விடை 2: முடியும். வளர்ச்சியடைந்த நாடொன்றில் குடியுரிமை பெறுவதற்கு இலகுவான வழி பொய் தகவல்களை வழங்குவதாகும்.

மேலுள்ள கேள்விக்கு சரியான விடையை தெரிவு செய்வதன் மூலம் நாளாந்த பரிசுக்குலுக்களில் பரிசினை வெல்லுங்கள். உங்களின் விடையை அல்லது விடைகளை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுடன் IOM நிறுவனத்தின் 0774410086 என்ற நேரடி இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.
விடைகளை SMS அல்லது வட்சப் அல்லது வைபர் மூலமாக 0774410086 என்ற இலக்கத்திற்கு அனுப்ப முடியும். S4 என்ற குறியீட்டை தவறாமல் குறிப்பிடவும்.

S4 விடை எண்(கள்), பிரசுரமான திகதி, பத்திரிகையின் பெயர்
பால்: ஆண் / பெண், வயது, ஊர் – மாவட்டத்தின் பெயர்
உதாரணம்: S4 3,4 22.03.2021 – உதயன், ஆண் 20 சிலாபம் – புத்தளம் மாவட்டம்.

**விடைகள் 07.04.2021 திகதி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.**

**பாதுகாப்பான மற்றும் முறையான புலம்பெயர்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இச்சித்திரக்கதை IOM நிறுவனத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

**புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் (IOM)**
9ஆம் மாடி, IBSL கட்டிடம்,
80A, எல்விடிகலை வீதி, பொறல்லை, கொழும்பு 8.

# மன அழுத்தத்துக்கு ஆளாகுகின்றனர் வடக்கு கிழக்கு அதிபர், ஆசிரியர்கள்

## தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை

**யாழ்ப்பாணம், மார்ச் 25**
**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றுகின்ற பெருமளவான அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மன அழுத்தங்களுக்கு உள்ளாகுகின்றனர். அதனால் அவர்களுக்கு தீராத நோய்கள் ஏற்பட்டு இறப்புக்களும் நிகழ்கின்றன என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;
வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாடசாலைகளுக்கான அதிபர் நியமனம், ஆசிரிய நியமனம் என்பவற்றில் பல்வேறு குளறுபடிகள் நடைபெறுகின்றன. பாடசாலைகளின் தரத்துக்கு ஏற்ப அதிபர்கள் நியமிக்கப்படுவதுமில்லை. வெற்றிடங்கள் நிரப்பப்படுவதுமில்லை. அதிபர் சேவை தரம் 1 இல் உள்ளவர் தரம் 3 பாடசாலையிலும், அதிபர் சேவைத் தரம் 3 இல் உள்ளவர் 1 ஏபி பாடசாலையிலும் கடமையாற்றுகின்றார். பெருமளவான கஷ்ட, அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளில் அதிபர் சேவையில் உள்ளவர்கள் கடமையில் இல்லை. மாறாக சேவைக் கொடுப்பனவுகள் ஏதுமின்றி ஆசிரியர்களே அதிபர்களது கடமைகளை மேற்கொள்கின்றனர். ஆசிரிய இடமாற்றங்கள் ஏனைய மாகாணங்களைவிட வடக்கு கிழக்கில் அதிகாரத்தில் உள்ளவர்களின் விருப்பப்படியே நடைபெறுகின்றன. கிழக்கு மாகாணத்தில் வலயங்களுக்கு இடையிலான ஆசிரிய இடமாற்றம் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களின் பதவி மோகத்தால் பல ஆண்டுகள் நடைபெறவில்லை. வடக்கு மாகாணத்தில் அரச சுற்று நிருபத்துக்கு (2007/20) மாறாக மேன்முறையீடுகள் எதனையும் ஏற்காமல் தாம் சொல்லும் இடத்துக்குச் செல்லவேண்டும் என்ற உத்தரவு. ஒரு பாடசாலையில் ஒரு பாடத்துக்கு ஒரேயொரு ஆசிரியர் இருந்தாலும் அவருக்கும் இடமாற்றம். அவர் இடமாற்றலாகிச் செல்லும் இடத்தில் ஆசிரியர்கள் மேலதிகம். பின்னர் நேரசூசி இல்லாதவர்களின் வேதனத்தை நிறுத்துவதாக அச்சுறுத்தல். இதற்கு கணக்காய்வுத் திணைக்களம் சாட்டு. இவை போன்ற ஏராளமான விடயங்களால் அதிபர்களும், ஆசிரியர்களும் மன அழுத்தங்களுக்கு உட்பட்டு சேவையில் இருந்து இடைவிலகுவதும் உரிய காலத்துக்கு முன்னரே ஓய்வுபெறுவதும், நோய்வாய்ப்படுவதும், இறப்பதும் வடக்கு, கிழக்கில் சாதாரணமாகிவிட்டது - என்றுள்ளது. (ப)

# விசேட பூசை வழிபாடுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 25
உலகில் வாழும் அனைத்து மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக, இறை ஆசி வேண்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சங்கானை சுழிபுரம் பறாளை ஈஸ்வர விநாயகர் (கண்ணைக் கோதிய காக்காப் பிள்ளையார்) தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளது. (ய)

# பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

கொடிகாமம், மார்ச் 25
மட்டுவில் வடக்கு அ.த.க பாடசாலையின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டமும், நிர்வாகத் தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி தர்சினி அம்பிகைபாகன் தலைமையில் நடைபெற்றன.
இதன்போது தலைவராக பாடசாலை அதிபரும், செயலாளராக செ.தரணிதரனும், பொருளாளராக சி.செல்வராசாவும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் 11 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ஐ-159)




# வளிமண்டலவியல் தினம் முல்லையில் கடைப்பிடிப்பு

முல்லைத்தீவு , மார்ச் 25
வளிமண்டலவியல் திணைக்களத்தின் ஏற்பாட்டில், முல்லைத்தீவு மாவட்ட செயலக திட்டமிடல் கிளையின் ஒருங்கமைப்பில் சர்வதேச வளிமண்டலவியல் தினமான நேற்று முன்தினம் 23ஆம் திகதி காலை மாவட்ட செயலகத்தின் புதிய மாநாட்டு மண்டபத்தில் உலக வளிமண்டலவியல் தினம் கடைப்பிடிக்கப்பட்டது.
இதன்போது வானிலை தொடர்பான விசேட விழிப்புணர்வுடனான காட்சிப் பகிர்வுகள் இடம்பெற்றன.
நிகழ்வில் மாவட்ட செயலர் க.விமலநாதன், வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அத்துல கருணாநாயக்க, வளிமண்டலவியல் திணைக்கள பணிப்பாளர் கே.டி.சுஜீவ மற்றும் அதிகாரிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் என பலதரப்பட்டோர் கலந்து கொண்டனர். (ச-19)

## தனிமைப்படுத்தல்;
# முன்மாதிரியாக செயற்பட்ட குடும்பம்

சாவகச்சேரி,மார்ச் 25
சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த குடும்பம் ஒன்று தாமாகவே முன்வந்து சுயதனிமைப்படுத்தலை மேற்கொண்டு முன்மாதிரியாக செயற்பட்டனர்.
இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் மருதனார்மடத்தில் சிற்றுண்டி நிலையம் ஒன்றை நடத்தி வருகிறார். குறித்த சிற்றுண்டி நிலையத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்த ஒருவர் பணிபுரிகிறார். அவரது வீட்டுக்கு வர்ணம் தீட்டச் சென்றவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து நிலையத்தில் பணிபுரிபவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். இந்த நிலையில் சிற்றுண்டி நிலையத்தை நடத்தி வந்தவரும் தமது சிற்றுண்டி நிலையத்தை மூடி குடும்பத்தினருடன் சுய தனிமைப்படுத்தலை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-9)



உலக நீர் தினத்தை முன்னிட்டு குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் யாழ் பிராந்திய அலுவலகத்தில் பொது முகாமையாளர் எந்திரி ஏ.ஜெகதீசன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் 50 றகும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு குருதிக் கொடையளித்தனர். (ச- 159)

# பொலிஸ் உத்தியோகத்தர் பதவிக்கு நேர்முகத்தேர்வு

முல்லைத்தீவு , மார்ச் 25
வவுனியாவில் பொலிஸ் உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.
வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்ற இந்த நேர்முகத்தேர்வில் பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் 250றகும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டனர்.
குறித்த நேர்முகத்தேர்வுகள் கொரோனா பரவலையடுத்து கட்டம் கட்டமாக இடம்பெற்றுவரும் நிலையில் புதிய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 31 ஆம் திகதிவரையில் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-110)



# இரு சம்பவங்களில் நால்வர் காயம்

சாவகச்சேரி,மார்ச் 25
வீதி விபத்து மற்றும் தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த 61 வயது பெண் உள்ளிட்ட நால்வர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவங்கள் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளன. சாவகச்சேரி கண்டி வீதியைச் சேர்ந்த 61 வயது பெண், சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலைய வீதியைச் சேர்ந்த19 வயது இளைஞர், நுணாவில் மத்தியைச் சேர்ந்த 36 வயது குடும்பத் தலைவர், ஊர்காவற்றுறை நாரந்தனையைச் சேர்ந்த 42 வயது நபர் ஆகியோரே காயமடைந்தனர். (ஐ-9)

# காலநிலையை அவதானிக்க முல்லையில் நிலையம் திறப்பு!

முல்லைத்தீவு, மார்ச் 25
முல்லைத்தீவு மாவட்ட வானிலை அவதானிப்பு நிலையம் உலக வளிமண்டல தினத்தை முன்னிட்டு மாவட்ட செயலாளரால் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்கரை வீதியில் அமைக்கப்பட்டஇந்த நிலையம், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் மற்றும் வளிமண்டலவியல் திணைக்கள பணிப்பாளர் அத்துள கருணாநாயக்கவாலும் திறக்கப்பட்டது. நிகழ்வில் படைத்தரப்பு பொறுப்பதிகாரிகள், மதகுருமார், வானிலை திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ப-19)



## இன்றைய நாள்

**மேடம்:** நெருக்கமானவருடன் மகிழ்ச்சியாகப் பொழுது போகும். இளைஞர்களுக்கு இன்று சிறு சிறு வெற்றிகள் ஏற்படும். தந்தை, தாயுடன் வாக்குவாதம் செய்ய வேண்டாம்.

**இடபம்:** பிரபலமானவர் அறிமுகமாவார். வாகன வசதி பெருகும். குற்ற உணர்ச்சியிலிருந்து விடுபட்டு நிம்மதி பெறுவீர்கள். இருப்பிடத்தின் அமைப்பை இன்று மாற்றுவீர்கள்.

**மிதுனம்:** பணியிடத்தில் மேலதிகாரி உங்களை நம்புவார். சமூகத்தில் உங்களின் மரியாதை கூடும். முயற்சி நிறைவேறும். நம்பியவர்களே துரோகம் செய்ய துணிவார்கள்.

**கடகம்:** ஆரோக்கிய பாதிப்புக்களால் மருத்துவச் செலவுகள் ஏற்படும். உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். எண்ணம் ஒன்று நிறைவேறிப் பெருமிதம் தரும்.

**சிம்மம்:** பழைய கொள்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டி வரும். பொழுது போக்கு அம்சங்களில் கவனம் செல்லும். பணம் வரும். வேலைப்பளுவால் அதிக நேரம் உழைக்க வேண்டி வரும்.

**கன்னி:** தேவையற்ற பொழுது போக்கில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வேற்று மொழி பேசுபவரால் இன்று நன்மை ஏற்படும். பணியாளர்கள் வழக்கத்துக்கு அதிகமாக உழைப்பீர்கள்.

**துலாம்:** நல்ல விஷயங்களில் அதிக கவனம் செலுத்துவது உத்தமம். பொதுநல விஷயத்தில் ஈடுபட்டு பாராட்டுப் பெறுவீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** பிரச்னைக்குத் தீர்வு காண அனுபவசாலிகளின் உதவி கிடைக்கும். பணியாளர்களுக்கு சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். எதிர்பாலின நட்பால் நன்மையும், முன்னேற்றமும் வரும்.

**தனுசு:** முக்கியஸ்தரின் தொடர்பு கிடைக்கும். புதிய மாற்றம் ஏற்படும். எதிர்பாலினத்தவர்களின் நட்பு உதவிகரமாக இருக்கும். சில நாளாக காணாமல் போயிருந்த நிம்மதி மீளும்.

**மகரம்:** சுபநிகழ்ச்சிக்கான முயற்சிகளில் முன்னேற்றம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். திடீர் நன்மை ஏற்படும். பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**கும்பம்:** புதிய வாய்ப்புகள் கிடைத்து லாபம் சற்றே அதிகரிக்கும். நண்பர்களின் வருகையால் வீட்டில் கலகலப்பு இருக்கும். சிறு கவலைகளை மறைத்து வைத்துச் சிரமப்படுவீர்கள்.

**மீனம்:** வாழ்க்கைத்துணைக்கு எதிர்பார்த்த நன்மைகள் வரும். அவசரப்படாமல் முயற்சியை முடுக்கி விடுவீர்கள். வங்கி சேமிப்பு கூடும். உங்கள் பெருமையை மற்றவர்கள் உணர்வர்

## தவக்கால சிந்தனை

### எண்ணங்கள் தூய்மையாகட்டும்

இயேசு தம் போதனையில் 'விபசாரம் செய்யாதே' எனக் கூறியிருப்பதைக் கேள்விப் பட்டிருப்பீர்கள்.

"கண்ணும் கையும் பாவத்தின் இடைத் தரகர்கள்" 'கண்ணும் இதயமும் பாவத்தின் வேலைக் காரிகள்". இவை யூத மண்ணுக்குச் சொந்தமான பழமொழிகள். இன்றைய உலகில் விளம்பரங்கள், புத்தகங்கள், திரைப்படங்கள், தொலைத் தொடர்பு சாதனங்கள் என்பன மனிதனை பாவங்களுக்குள் ஈர்க்கின்றன.

புதிதாக குருகுலத்துக்கு வந்த ஒருவர் குருவிடம் ஓர் கேள்வியை எழுப்பினார். "குருவே! என்னைத் தவிர அனைவரும் இங்கே மகிழ்ச்சியாக இருக்கிறார்களே காரணமென்ன?" அதற்கு குரு 'அவர்கள் எதிலும் அழகையும் நல்லவற்றையும் காண்பதற்குக் கற்றுக் கொண்டார்கள்" என்றார். 'ஏன் என்னால் அதைப்பார்க்க முடியவில்லை?' என்றார் அந்தப் புதிய சீடர். குரு மறுமொழியாக 'ஏனென்றால் உன்னால் உன்னில் நல்லதைக் காண முடியவில்லை. நீ உன்னில் காணாதவைகளை வேறு எங்கும் காணவே முடியாது" என்றார்.

நல்ல சிந்தனைக் கண்ணோட்டங்களுக்கு இடமளித்து தீயவற்றுக்கு விடைகொடுத்து நல்லவர்களாவோம்.

**எஸ்.யேசுதாஸ்,**
கொழும்புத்துறை.



# தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் போராட்டம்


ஹற்றன்,மார்ச் 25

தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக, இராகலை. மாகுடுகலை மற்றும் கிளன்டெவன் ஆகிய தோட்டங்களின் தொழிலாளர்கள் 18 ஆவது நாளாகவும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு வலப்பனை பிரதேச சபை உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மாகுடுகலை பெருந்தோட்ட நிர்வாகம் ஒய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை வேலைக்கு அமர்த்தியிருப்பது தொடர்பாக பல தரப்புகளிலிருந்தும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நுவரெலியா உதவித் தொழில் ஆணையாளர் தோட்ட நிர்வாகத்துக்கு நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் மூலம் அறிவித்திருந்தபோதிலும், அதனை இதுவரையில் தோட்ட நிர்வாகம் நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டது. இதன் காரணமாக தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (க-இ)

# மண் அகற்றிய இயந்திரத்தில் சிக்கியவர் சாவு



மண் அகற்றிக் கொண்டிருந்த இயந்திரம் திடீரென குடை சாய்ந்ததில், அதற்குள் சிக்கிய நபர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கினிகத்தேனை பொல்பிட்டிய விகாரைக்கு அண்மையில் நேற்றுக் காலை நடந்துள்ளது. மண் அகற்றும் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தடுப்புக் கட்டை செயலிழந்துள்ளது. அதனால் இயந்திரம் பின்னோக்கி இழுத்துச் செல்லப்பட்டபோது, சாரதி வெளியில் பாய்ந்துள்ளார். அவர் பாய்ந்த பக்கத்திலேயே இயந்திரம் குடை சாய்ந்தது. அதற்குள் அகப்பட்டு குறித்த நபர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் பதுளை ஹாலிஎல உடுவரப் பகுதியைச் சேர்ந்த யாப்பா முதியன்ஸலாகே சந்தருவான் மதுசங்க யாப்பா (வயது 22) என அடையாளம் காணப்பட்டுள்ளார். (க-இ)

# பெண்ணின் உயிரை பறித்தது மின்வேலி

கொழும்பு,மார்ச் 25

பயிர்களைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த மின் இணைப்பு வேலியில் சிக்கி, குடும்பப்பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் ஹாலி எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லந்தேவெல பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது.

உயிரிழந்த பெண்ணின் கணவர், பயிர்களைப் பாதுகாப்பதற்காக, காணியில் மின்சார இணைப்பை ஏற்படுத்தியிருந்தார்.

இதனை அறியாத அவரது மனைவி , காலை உணவைச் சமைப்பதற்காக , தங்களது தோட்டத்தில் உள்ள மரக்கறிகளைப் பறிக்கச் சென்றுள்ளார். அதன் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹாலி எல லந்தேவெலப் பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கணவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (க-இ)

# உத்தரவுகளை மீறிய 112 பேர் நாடு கடத்தல்

கொழும்பு,மார்ச் 25

குவைத்தின் தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறியமைக்காக, 112 இலங்கையர்கள் அந்த நாட்டு பாதுகாப்பு படையினரால் கைதுசெய்யப்பட்டு, நாடு கடத்தப்பட்டனர்.

112 இலங்கையர்களும், சிறப்பு விமானத்தின் மூலமாக கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்று வந்தடைந்தனர். அனைவரும் விமான நிலையத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். அதன் பின்னர் தனிமைப்படுத்தலுக்காக இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டனர். (க-இ)

# உள்ளக விசாரணையில்லையேல் சர்வதேச விசாரணை நடைபெறும்

## எச்சரிக்கிறார் இராஜதந்திரி தயான் ஜயதிலக்க



கொழும்பு, மார்ச் 25

வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களின் பங்குபற்றலுடன் சிறப்பு நீதிமன்றத்தை நிறுவி உள்ளக விசாரணையை இலங்கை முன்னெடுக்காவிட்டால் சர்வதேசப் பொறிமுறை செயற்படத் தொடங்கிவிடும். அதனைத் தடுத்து நிறுத்த முடியாது என்று ஐ.நா.வுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியும், மூத்த இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை விவகாரம் தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அடுத்துவரும் அமர்வுகளில் என்ன நடக்கும் என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை விவகாரம் தொடர்பில் 6 மாதங்களுக்கு ஒரு தடவை மீளாய்வு செய்யப்படும். 2022ஆம் ஆண்டு செப்ரெம்பர்வரை காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் திரட்டப்படும் ஆவணங்கள் எல்லாம் 2022ஆம் ஆண்டு செப்ரெம்பருக்குப்பிறகு உலக நாடுகளிலுள்ள நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும். அவ்வாறு நடைபெற்றால், குறைந்த பட்சம் பிரேரணையை ஆதரித்த 22 நாடுகளிலாவது வழக்குத் தொடுக்கப்படும்.

இவ்வாறு வழக்குத் தொடுத்தாலும் எதுவும் செய்யமுடியாது என்று இலங்கை அரசு சவால் விடுக்கும்பட்சத்தில் அடுத்த கட்ட நடவடிக்கையாக, முதலீடு, சுற்றுலாத் துறை, வர்த்தகம் உள்ளிட்ட விடயங்களில் இறுக்கமான போக்குக் கடைப்பிடிக்கப்படும். எனினும், இலங்கைக்கு இன்னுமொரு வாய்ப்பு எஞ்சியுள்ளது.

2022ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் சேர். டெஸ்மன் டி சில்வாவாலும் (பரணகம ஆணைக் குழு), அதற்கு முன்னர் நல்லிணக்க ஆணைக்குழுவாலும் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்களுமைய நம்பகமான விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்படவேண்டும்.

தங்களுக்கு விசுவாசமான நீதிபதிகளை நியமிக்காமல், உலகம் ஏற்றுக்கொள்கின்றவர்களை அல்லது வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை நீதிபதிகளை உள்ளடக்கிய வகையில் சிறப்பு நீதிமன்றமொன்றை நிறுவி, விசாரணைகளை முன்னெடுத்து தவறிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கப்படவேண்டும். இவற்றைக் கண்காணிக்க வெளிநாட்டு கண்காணிப்பாளர்களும் அழைக்கப்படவேண்டும்.

அவ்வாறு செய்யாவிட்டால் சர்வதேசப் பொறிமுறை செயற்பட ஆரம்பித்துவிடும். இலங்கை விவகாரம் ஏற்கனவே சர்வதேச மயப்படுத்தப் பட்டிருந்தாலும் அதன் பொறிமுறை செயற்படவில்லை. இனி செயற்படத் தொடங்கினால் அதனை நிறுத்த முடியாது- என்றார். (ஒ.44)

## உணவகத்தில் தீ ஊழியர் உயிரிழப்பு

கொழும்பு.மார்ச் 25

உணவகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி, ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு பஞ்சிகாவத்தை, சங்கராஜா மாவத்தையில் அமைந்துள்ள உணவகமொன்றில் நேற்று அதிகாலை நடந்துள்ளது.

தீயணைப்பு வாகனங்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

மேலதிக விசாரணை களைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

## ரஷ்ய தடுப்பூசிக்கு அமைச்சரவை அனுமதி

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட ஸ்பூட்னிக் வி தடுப்பூசியின் 7 மில்லியன் டோஸ்களை கொள்வனவு செய்ய அமைச்சரவ்வை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்காக 69.65 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்படும் என்று அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனூடாக இலங்கையில் 14 மில்லியன் பேருக்கு கொவிட் தடுப்பூசி ஏற்ற முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க-இ)

# அருளார் அமுதம் வழங்கும் அருட் சிவயோக வள்ளல்



**யோகர் சுவாமிகளின் குருபூசை தினத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது**

யோகசுவாமிகள் செல்லப்பதேசிகர் அருளால் சிவபோகத்தில் பொருந்திய இடம் நல்லூர்த் தேரடி. அவர் அரை நூற்றாண்டு காலமாக உறைந்து சிவதொண்டு புரிந்த இடம் கொழும்புத்துறை ஆச்சிரமம். தமது சாந்நித்தியம் என்றும் நின்று நிலவும் வண்ணமாய்க் கோவில் கொண்டருளும் இடம் சிவதொண்டன் நிலையம்.

செல்லப்பமூர்த்தம் ஒரு சிவமூர்த்தமே. யோகசுவாமிகள் இம்மூர்த்தத்தை மூவர்களும் ஒன்றாகச் சேர்ந்த நல்ல மூர்த்தம் எனப் போற்றுவார். இந்தக் குருமூர்த்தம் யோக சுவாமிகளைத் தம்மோடு கூடக் குடியிருத்தி ஞானவித்தையின் நுட்பங்களையெல்லாம் ஒன்றும் ஒழியாமற் போதித்து, அப்போதனை நிறைவுற்றபின் ஒருநாள் யோகசுவாமிகளை உவகை பூத்த முகத்துடன் உற்றுநோக்கி ஒருபொல்லாப்புமில்லை என்று அருவமும் காட்டி, உருவமும் காட்டி, அப்பாற்கப்பாலாம் அருள் நிலை காட்டிக்காட்டி, அந்தம் ஆதியில்லாச் சொருபமும் காட்டிச் சும்மா இருக்கும் சூட்சத்தில் மாட்டி விட்டார்.

யோகசுவாமிகளது திருவுள்ளத்திலே ஆசான் தமக்கு ஈந்த அனுபவ சித்தாந்தத்தை உலகறிய விளக்கம் செய்ய வேண்டுமென்ற திருக்குறிப்புத் தோன்றியதும் கொழும்புத்துறைக் கொட்டிலிற் போயமர்ந்தார். தக்கவர்களைத் தேடி யாழ்ப்பாணத்துச் சந்தி தெருக்கள், சந்தை கடைகளெங்கும் திரிந்தார். நம்மவர் உத்தியோகம் புரிந்த கொழும்புப்பட்டினம், கண்டி, மலைநாடெல்லாம் மாதம் ஒருமுறை சுற்றி வந்தார்.

ஒரு ஞானிக்கும் ஞான நாட்டமுடையோர்க்குமான சம்பந்தம் மலருக்கும் மதுவண்டுக்கும் உள்ளதும், பழமரத்துக்கும் வௌவாலுக்கும் உள்ளதும் போன்ற சம்பந்தமெனவே தோன்றுகின்றது.

சுவாமிகளை ஒரு பெரும் திருக்கூட்டம் சூழ்ந்தது. அந்தத் திருக்கூட்டத்தில் சித்தாந்தசாத்திர நூல்களைச் சிந்தித்துச் சிந்தித்து சோதியாய்ப் பரிணமித்த திருவிளங்க தேசிகர் ஆகிய தீவிரதரபக்குவர்கள் இருந்தனர்.

திருவடியின்பத்தைக் குறியாய்க் கொண்டு சுவாமிகளின் பின்னே முன்பின் நாடாது செல்லவல்ல மார்க்கண்டு சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள் முதலான உத்தமச் சீர்கள் இருந்தனர். பிரம்மஸ்ரீ கணேசையர், சோமசுந்தரப்புலவர் ஆகிய இருமொழிக் கடல்களும் பழுத்த தமிழ்ப் புலவர்களும் இருந்தனர். சுவாமிகள் தம்மைச் சூழ்ந்த திருக்கூட்டத்தி நருக்கு அவரவர்க்கு அதுவதுவாய் நின்று அருள் சொரிந்தார்.

அவரிடம் வந்த அனைவரும் தாம் ஏந்திய பாத்திரத்தின் கொள்ளளவிற்குத்தக அருளமுதத்தைப் பெற்றனர். அவர் சிலருக்கு வாக்கியப்பிரசாதம் ஈந்தனர். சுவாமிகள் தாம் திருவடிக்கலப்புறுவதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன் சிவதொண்டன் நிலையத்தை நிறுவினார்.

சிவதொண்டன் நிலையத்துக் குறிக்கோள் மௌன மாயிருந்து இளைப்பாறுதல். மாந்தர் வெய்ய புவி பார்த்து விழித்திருந்து துயரகல ஆறியிருக்கும் இணையடி நிழலாக இந்நிலையம் அமைந்திருக்கின்றது. யாழ்ப்பாணம் முழுவதற்கும் சோதிப் பிரகாசமளிக்கும் ஞானச்சுடர் விளக்காகச் சிவதொண்டன் நிலையம் ஒளிர்கிறது. இந்நிலையத்திலே கடந்த மூன்று நாள்களாக ஆச்சிரம வாழ்வு வாழ்ந்து நற்சிந்தனை முற்றோதல் புரிந்த அடியார்கள் இன்று யோகசுவாமிகளின் ஐம்பத்தேழாவது குருபூசையை அபிசேக ஆராதனைகளுடன் சிறப்புறக் கடைப்பிடிக்கின்றனர்.

**சிவதொண்டன் சபை**
யாழ்ப்பாணம்

# புலிகளின் குற்றங்களை கண்டுகொள்ளவில்லையாம்

## கவலைப்படுகிறது பாகிஸ்தான்

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் பக்கச்சார்பானது. இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் மேற்கொள் ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இந்தத் தீர்மானம் கண்டுகொள்ளவில்லை. அவர்களுக்கு நிதியுதவி வழங்கியவர்கள் தொடர்பில் எத்தகைய பொறுப்புக் கூறலையும் முன்வைக்கவில்லை. இவ் வாறு ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கான பாகிஸ் தான் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்ப டுவதற்கு முன்னர், சில நாடுகள் கருத்துக்களை முன்வைத்தன.

இதன்போது பாகிஸ்தான் பிரதிநிதி, இலங்கை அர சுக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி னார். இலங்கை மக்களின் காயங்களைக் குணப்ப டுத்துவதைவிட, துன்பங்களை மீண்டும் உருவாக்கு வதாக இந்தத் தீர்மானம் அமைகின்றது என்று அவர் குறிப்பிட்டார். (ஒ-இ)

# ஜெனிவா தீர்மானம்; ரெலோ அதிருப்தி

"இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் நிறைவேற் றப்பட்டபோதும் பிரேரணையில் உள்வாங்கப்பட்ட விடயங்கள் நீதி வேண்டி நிற்கும் தமிழ் மக்களுக்கு சர்வதேச ரீதியிலே பரிகார நீதியைப் பெற்றுக்கொ டுக்க வழி ஏற்படுத்தவில்லை என்பதை நாம் ஆழ்ந்த கவலையோடு அவதானிக்கிறோம் " என்று ரெலோ அமைப்பு பிரேரணை குறித்த தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

> மனித உரிமைகள் பேர வையில் இந்த நீதியை பெற்றுத் தருவதற்கான பிரேரணையை நிறை வேற்றும் முகமாக, சர்வ தேச நாடுகள் மேற்கொள் ளும் நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வந்து ஐ.நா செயலா ளர் நாயகத்திடம் கைய ளிப்பதன் மூலமே எமது மக்களுக்கான நீதியை பெற்றுக் கொள்வதற் கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

ரெலோ அமைப்பு வெளியிட்டுள்ள செய் திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

தமிழ்த் தேசியக் கட் சிகளும், புலம்பெயர் அமைப்புக்களும் ஒன் றிணைந்து சர்வதேச குற்றவியல் நீதிப் பொறி முறை ஒன்றை உரு வாக்கி தமிழ் மக்களுக் கான நீதியை வழங்க வேண்டும் என்றும், அதற்கு வலுசேர்க்க சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டு மென்றும் முன்வைத்த கோரிக்கைகளை இந்த பிரேரணை கருத்தில் கொள்ளவில்லை தொடர்ந்தும் இந்த பிரேரணைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்டாலும் இலங்கை அரசாங்கத்தினால் அதற்கு அனுசரணை வழங்கப்படாமலும், வழங்கினாலும் அவை நிறைவேற்றப்படாமலும் இழுத்தடிப்பு செய் கின்ற நிலைமை கடந்த பல வருடங்களாகக் காணப் படுகிறது. -என்றுள்ளது. (ஐ)

# ஐ.நா.வில் நிறைவேறிய தீர்மானம் வலுவற்றது

## நாடு கடந்த தமிழீழ அரசு சுட்டிக்காட்டு

கொழும்பு,மார்ச் 25

ஐ.நா. மனித உரிமைச் சபையில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் இலங்கைக்கு ஏற்பட்ட தோல்வியே தவிர, தமிழர்களுக்கு நீதியாக மாறவில்லை. அது பொறுப்புக்கூறலை இலங்கை அரசிடமே கொடுக் கின்ற ஓர் வலுவற்ற தீர்மானமாகவுள்ளது.

இவ்வாறு நாடுகடந்த தமிழீழ அரசு சுட்டிக்காட்டி யுள்ளது. இது தொடர்பான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த காலத்தில் இலங்கை சாமார்த்தியமாக 'பயங் கரவாதத்தின் மீதான போர்' என்று பூச்சாண்டி காட்டி உத்திகளைக் கையாண்டது. 2015 ஆம் ஆண்டு ஏமாற்று அரசியலைக் கையாண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30/1 தீர்மானத்தைப் பிற நாடுகளுடன் கூட்டாக முன்மொழிந்து விட்டு, அத னைச் செயலாக்காமல் அனைத்துலக சமூகத்தைச் சமாளித்தது.

ஏற்கனவே தங்களிடம் சான்று இருக்கிறது என ஐ.நா. மனித உரிமைகள் சபையின் துணை ஆணையாளர் மொர்கான் வில்லியம்ஸ் கூறியுள்ள போதிலும், புதிய தீர்மானத்தில் ஒரு கூறு 'ஐ.நா ஆணையாளர் அலுவலகம் தகவலும் சான்றும் திரட்டவும் ஒருங்கமைக்கவும், பகுத்தாராயவும், பாதுகாக்கவும் வேண்டும்' என்று கேட்டுக் கொள் கிறது என உள்ளது. இது பாதிக்கப்பட்ட தமிழர்களை ஆற்றுப்படுத்துவதற்காகச் சேர்க்கப்பட்ட வெற்றுக் கூடான உள்ளடக்கமே.

இந்தத் தீர்மானம் இலங்கை விவகாரத்தில் பின் னோக்கிச் சென்றுள்ளது.

இலங்கை அரசின் உயர்நிலையில் இருப்பவர்கள் போர்க்குற்றங்கள் புரிந்திருப்பதைத் தெளிவாகச் சுட்டிகாட்டும் வகையில், ஐ.நா.வின் மூன்று அறிக் கைகள் உள்ளன.

இலங்கையை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன் றத்தில் கொண்டுபோய் நிறுத்துவதற்குத் தேவைப் படுவது நாடுகளிடத்திடத்தில் அரசியல் மனவுறுதி தானே தவிர புதிய செயற்றிட்டமன்று.

அரசுகளின் கட்டுப்பாட்டிலுள்ள மன்றங்களில் நீதி பெறுவதில் அரசுகளற்ற தேசங்கள் சந்திக்கும் சவால்களை ஐ.நா. மனிதவுரிமைகள் சபையின் இந்தத் தீர்மானம் காட்டுகிறது. -என்றுள்ளது. (சு-இ)

# இலங்கைத் தீர்மானத்தைச் செயற்படுத்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு இல்லை!

## நிதிப் பிரிவின் இயக்குநர் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 25**

**இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கான நிதி 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை என்று ஐ.நா.வின் திட்டமிடல் மற்றும் நிதிப் பிரிவின் இயக்குநர் ஜோகன்னஸ் ஹுய்ஸ்மேன், மனித உரிமைகள் சபையின் செயலருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

இதேவேளை, இலங்கைத் தீர்மா னத்தை செயற்படுத்தத் தேவை யான 2.8 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்குவதற்கு ஆஸ்திரேலியா முன்வந்துள்ளது.

இலங்கை தொடர்பில் நிறைவேற் றப்பட்ட தீர்மானத்துக்கு அமை வாக இலங்கையில் பணிபுரிவ தற்கு 12 ஊழியர்களை மனித உரிமைகள் ஆணையாளர் அலு வலகம் நியமிக்கவேண்டும்.

அவர்களில் சர்வதேச குற்றவி யல் நீதி அல்லது குற்றவியல் விசாரணைகளில் அனுபவமுள்ள சட்ட ஆலோசகர்கள், அணியை ஒருங்கிணைக்க வழக்குகள் வழங் குவோர், ஒரு தகவலை மேற் பார்வை செய்பவர்கள், சான்றுகள் சேகரிப்போர், ஆய்வாளர்கள், இரண்டு புலனாய்வாளர்கள் அல் லது மனித உரிமை அதிகாரிகள் மற்றும் பாதிக்கப்பட்ட ஆதரவு அதிகாரிகள் ஆகியோர் உள்ளடங் குவார்கள்.

இதேவேளை, இலங்கையில் மனித உரிமை மீறல்கள் அல் லது சர்வதேச மனிதாபிமான சட் டத்தின் கடுமையான மீறல்கள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களுக்கான வாதிடுதல், தகவல் மற்றும் ஆதாரங்களைச் சேகரித்தல், ஒருங்கிணைத்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பாது காத்தல் மற்றும் எதிர்கால பொறுப் புக்கூறல் செயல்முறைகளுக்கான சாத்தியமான உத்திகளை உரு வாக்கும் பணி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஊடாக மேற்கொள் ளப்படவுள்ளது. (ஒ-இ)

ஐ.நா. தீர்மானம்

# பொறுப்புக்கூறலை அடைவதற்கான முக்கியமான ஒரு முன்னேற்றப்படி

## கனடா எம்.பி. ஹரி தெரிவிப்பு

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மா னம் இலங்கையில் இடம்பெற்ற மிகப்பெரிய மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறலை அடைவதற்கான முக்கியமான ஒரு முன்னேற்றப் படியாகும்" என்று கனடா நாட் டின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை யின் தீர்மானம் தொடர்பில் அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

பொறுப்புக்கூறலை முன்னேற்றுவதற்கு இலங்கை தவறியுள்ளதை இந்தத் தீர்மானம் காட்டுகிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் பேரவை 2009 ஆம் ஆண்டு இந்த விடயத்தை எடுத்துக்கொண்ட பின்னர் நிறை வேற்றப்பட்ட மிகப் பலமான தீர்மானமாக இது அமைகிறது. நாம் இலங்கையில் புரியப்பட்ட மனிதஉரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறலைத் தொடர்ந்து கோருவதுடன், இந்த விடயத்தை சர்வதேச சமூகத்தின் நிகழ்ச்சி நிரலில் தொடர்ந்து வைத்திருப்போம். என் றுள்ளது. (ஐ-இ)

# பச்சைத் துரோகம்

## இந்திய மத்திய அரசை சாடுகிறார் வைகோ

தமிழகத் தேர்தலால் தமிழ் மக் களை ஏமாற்றுவதற்காகவே இலங்கைக்கு எதிரான தீர்மா னத்துக்கு ஆதரவளிக்காமல் இந்தியா நடுநிலை வகித்தது. தேர் தல் காலமாக இல்லாதிருந்தால் இந்தியா இந்தத் தீர்மானத்தை எதிர்த்திருக்கும். இந்தியா செய் தது பச்சைத் துரோகம் என்று ம.தி.மு.க. பொதுச் செயலா ளர் வை.கோபாலசாமி தெரிவித்துள் ளார். ஐ.நா. தீர்மானத்துக்கு இந் தியா நடுநிலைமை வகித்தமை தொடர்பில் அவர் இந்திய மத்திய அரசைக் கடுமையாகச் சாடினார்.

'இந்திய அரசின் இந்தச் செயற் பாடு ஈழத் தமிழர்களுக்குச் செய்த மன்னிக்க முடியாத துரோகம். தமிழ்நாட்டில் தேர்தல் இடம்பெ றவுள்ள நிலையில் மக்களை ஏமாற்றுவதற்காகவே வெளிந டப்பு செய்துள்ளார்கள்' என்று வைகோ தெரிவித்துள்ளார். (ஒ-இ)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 15 . 07 . 1958



மறைவு 23 . 02 . 2021

சிவலை நாகேந்திரன் (நாகராசா)

ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் உறவுகள்கொண்டு
கூடிக் களித்து நிதம் வாழ்ந்த நிலைகண்டு காலன்
கோர மனத்தோடு தம் உயிரைப்பறித்து எம்மை
துயர்க் கடலில் ஆழ்த்தினனே.

பொன்மலர்ந்த முகமும் கள்ளமில்லாத புன்சிரிப்பும்
கனிவான பார்வையும் கொண்டவரே!
அன்பு கனிந்த பேச்சும் எளிமையான தோற்றமும்
எம் கண்முன் நிலைக்கவிட்டு மீளாத்துயில் கொண்டு
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றீரே!

ஊர் போற்றும் உத்தமராய்
பெற்றோர் உறவினர்களிடம் பாசம் கொண்டவராய்
கட்டிய மனைவி பிள்ளைகள் மீது நேசம்
- நிறைந்தவராய்
நன்கு மதிக்கப்பட்ட ஒருவராய் வாழ்ந்து
திடீரென எமைப்பிரிந்து இறைபதம் அடைந்தீரே.

மாதமொன்று போனாலும் நீங்காத உம் நினைவில்
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை
- வேண்டுகின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலியை முன்னிட்டு இன்று (25.03.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கைதடி தெற்கு, கைதடியில் அமைந்துள்ள அன்னாரது சகோதரியின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி தெற்கு, கைதடி. குடும்பத்தினர்

# பூநகரி குடமுருட்டி ஆற்றுப்படுக்கையில் மணல் அகழ்வைத் தடுக்க கோரிக்கை

**கிளிநொச்சி, மார்ச் 25**

**கிளிநொச்சி பூநகரி குடமுருட்டி ஆற்றுப்படுகையில் தொடர்கின்ற சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துமாறு குடமுருட்டிக் குளத்தின் கீழான விவசாயிகள் பூநகரி பிரதேச செயலாளர் ச.கிருஸ்ணேந்திரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

குடமுருட்டிக் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தை நடத்த பிரதேச செயலாளர் நேற்றுமுன்தினம் வருகை தந்த போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குடமுருட்டி ஆற்றுப்படுகையில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெறுவதால் குளத்தின் கீழான பயிர்ச் செய்கைகள் பாதிக்கப்படும். இதேவேளை குடமுருட்டி ஆற்றில் இருந்து டிப்பர்களில் மணல் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது எனவும் அவர்கள் பிரதேச செயலருக்கு சுட்டிக்காட்டியுள்ளனர். இதற்குப் பதிலளித்த பிரதேச செயலர், மணல் அகழ்வைக் கட்டுப்படுத்தக் குழு ஒன்று அமைக்கப்படும் எனவும், அக்குழுவிடம் மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடல்கள் நடத்தி மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகள் ஏற்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (வ-13)

# குடமுருட்டிக் குளத்தின் கீழ் 322 ஏக்கர் சிறுபோக செய்கை

கிளிநொச்சி, மார்ச் 25

கிளிநொச்சி பூநகரி குடமுருட்டிக் குளத்தின் கீழ் 322 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. பூநகரி பிரதேச செயலாளர் ச.கிருஸ்ணேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கூடுதலாக நாற்பது ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கான நிலங்களை குழு ஒன்று பார்வையிட்ட பின்னர் ஒரு வாரத்தில் அது தொடர்பான முடிவுகள் அறிவிக்கப்படும் எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை 25 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்வது எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரி.ரிசியந்தன், மாகாண விவசாயத் திணைக்கப் பணிப்பாளர் எஸ்.அற்புதச்சந்திரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எஸ்.செல்வராஜா உட்பட விவசாயிகள் பலரும் கலந்து கொண்டனர். (வ-13)

# மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணின் சங்கிலி அறுப்பு

முல்லைத்தீவு, மார்ச் 25

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த பெண்ணின் சங்கிலி அறுக்கப்பட்ட சம்பவம் ஒன்று முல்லைத்தீவு அம்பலப்பெருமாள்குளப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

அக்கராயனில் இருந்து அம்பலப்பெருமாள் குளத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பெண்ணின் பின்பக்கமாக மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த இரு கொள்ளையர்கள் சங்கிலியை அறுத்துள்ளனர். சங்கிலி அறுக்கப்பட்டதால் கணவரும் பெண்ணும் நிலைதடுமாறி வீதியில் விழுந்து உள்ளனர். கொள்ளையர்கள் சங்கிலியுடன் துணுக்காய் பகுதி நோக்கித் தப்பிச் சென்று விட்டனர். சம்பவம் தொடர்பில் ஐயன்கன்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-13)

# நட்பு நாடுகள் நடுநிலைமை வகித்தமை அரசின் தோல்வியே

## ஐ.ம.ச. சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 25

இந்தியா மற்றும் ஜப்பான், கொரியா போன்றவை இலங்கையின் நட்பு நாடுகளாகும். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணைக்கு அவற்றின் ஆதரவைக்கூட இந்த அரசால் பெறமுடியாது போயுள்ளது. இது தொடர்பில் ஆராய வேண்டும். நட்பு நாடுகள் ஏன் எம்முடன் முரண்பட்டுள்ளன? எனவே, வெளிவிவகாரக் கொள்கை உரிய வகையில் முகாமை செய்யப்படவேண்டும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் மாநாடு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது ஜெனிவா விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடுநிலை வகித்த நாடுகளும் பிரேரணைக்கு எதிர்ப்பு என்ற தொனியில் வெளிவிவகார அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார். இது வெட்கத்துக்குரிய செயலாகும்.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு சொத்துகள் முடக்கப்படலாம். சுற்றுலாவுக்கு தடைவிதிக்கப்படலாம். பொருளாதாரத் தடைகள் வரக்கூடும். எனவே இது பாரதூரமான பிரச்சினையாகும்.

அதேவேளை, போர்க்காலம் குறித்தே ஜெனிவாவில் பேசப்பட்டுள்ளது என்ற மாயையை உருவாக்குவதற்கு அரசு முயற்சிக்கின்றது. அவ்வாறு அல்ல. சிவில் நிர்வாகம் இராணுவ மயப்படுத்தப்பட்டமை, சுயாதீன ஆணைக் குழுக்களின் சுயாதீனம் சவாலுக்குட்படுத்தப்பட்டமை, அரசியல் அழுத்தம், இனவாதம் ஆகியவை தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவற்றை அரசால் நிவர்த்தி செய்யமுடியும். அதனைவிடுத்து ஆணைக்குழுக்களை அமைத்துக்கொண்டிருப்பது பயன் தரமாட்டாது. பிழைகளை சரிசெய்யாவிட்டால் இந்த அரசால் முன்னோக்கிப் பயணிக்க முடியாது - என்றார். (ஒ-44)

# வாகன இலக்கத் தகட்டில் மாகாண குறியீடு நீக்கம்

கொழும்பு,மார்ச் 25

வாகன இலக்கத் தகடுகளில் மாகாணங்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் சுமித் அழககோன் தெரிவித்தார்.

எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# சூடுவெந்தபுலவு சோதனைச்சாவடி நிரந்தரமாகியது

வவுனியா, மார்ச் 25

வவுனியா நெளுக்குளம் வீரபுரம் பாதையில் உள்ள சூடுவெந்தபுலவு பகுதியில் அமைக்கப்பட்ட தற்காலிக இராணுவ சோதனைச்சாவடி நிரந்தரமானதாக மாற்றப்பட்டு சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.



கடந்த வருடம் நாட்டில் கொரோனாப் பரவல் தீவிரமடைந்ததையடுத்து நாடாளாவிய ரீதியில் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதன்போது மக்களைக் கண்காணிக்கும் வகையில் வவுனியா மாவட்டத்தின் சூடுவெந்தபுலவு, ஓமந்தை, ஈரப்பெரியகுளம் மற்றும் கனகராயன்குளம் ஆகியவை உட்பட பல்வேறு பகுதிகளில் தற்காலிக இராணுவ சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, பாதுகாப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

தற்போது, ஓமந்தை சோதனைச் சாவடி நிரந்தரமாக்கப்பட்டுள்ள நிலையில், நெளுக்குளம் - வீரபுரம் வீதியில் உள்ள சூடுவெந்தபுலவு பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக சோதனைச் சாவடி தற்போது நிரந்தர கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வீதித் தடைகள் போடப்பட்டு நிரந்தர சோதனைச் சாவடியாக மாற்றப்பட்டுள்ளது. (வ-18)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டு வேலை செய்வதற்கும் தங்கிநின்று 2 வயது குழந்தையை பராமரிப்பதற்கும் அனுபவமுள்ள பணிப்பெண் தேவை.

தொடர்பு: 077 308 3007 நல்லூர், யாழ்ப்பாணம்.

## வேலையாட்கள் தேவை

நெல்லியடியில் இயங்கும் புடைவைக் கடைக்கு ஆண் வேலையாட்கள் தேவை

தொடர்பு : 077 805 2735


# 4 கிலோ கஞ்சா மீட்பு: இளைஞர் கைது

வவுனியா, மார்ச் 25

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் கேரளா கஞ்சாவை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை வவுனியா பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

இரகசிய தகவலின் அடிப்படையில் அந்த நபரிடம் சோதனை நடத்தியபோது 4 கிலோ 600 கிராம் நிறையுடைய கேரளா கஞ்சா மீட்கப்பட்டது.

(த-110)


## வீடு விற்பனைக்கு

கூளாவடி லேன் ஆனைக்கோட்டையில் 4 3/4 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை

077 756 3041



## கொக்குவில் நந்தாவில்
## கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்
## மணவாளக்கோலத் திருவிழா

26.03.2021 வெள்ளிக்கிழமை அன்றையதினம் காலை 7.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும் பரிவாரமூர்த்திகளுக்கு விசேட அபிஷேகம் பூசைகளும் இடம்பெற்று அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலாவருவார்.

இந்நிகழ்வில் அம்பிகை அடியார்கள் கலந்து அருளைப்பெற வேண்டுகின்றோம்.

பரிபாலன சபையினர்.

# Invitation for Bids (IFB)

**Democratic Socialist Republic of Sri Lanka**
**Northern Provincial Council**
**Provincial Department of Agriculture, Northern Province**
**Procurement of Goods**

01. The Chairman, Procurement Committee on behalf of Provincial Department of Agriculture, Northern Province now invites sealed bids from eligible and qualified bidders for the items listed below.

| S.No | Bid Number | Item | Bid Security Amount |
|---|---|---|---|
| 01 | NP/25/03/10/CBG/2021/01 | Supply of Furniture | 45,000/= |
| 02 | **NP/25/03/10/CBG/2021/02** | **Supply of ICT Equipments** | |
| | NP/25/03/10/CBG/2021/02 -I | Photocopier | 48,750/= |
| | NP/25/03/10/CBG/2021/02 -II | Fax Machine | 6,000/= |
| | NP/25/03/10/CBG/2021/02 -III | Desktop Computer | 20,000/= |
| | NP/25/03/10/CBG/2021/02 -IV | Printer | 7,500/= |
| | NP/25/03/10/CBG/2021/02 -V | Multimedia Projector | 27,200/= |
| | NP/25/03/10/CBG/2021/02 -VI | Finger Print Machine | 3,750/= |
| 03 | NP/25/03/10/CBG/2021/03 | Supply of Airgun | 16,000/= |

02. Bidding will be conducted through National Competitive Bidding

03. Bidders shall be a Srilankan citizen or private entity who may have a valid business Registration for the supply of above Items.

04. Bidder should have at least three years' experience in the relevant field in Sri Lanka.

05. A complete set of bid documents in English language could be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a Nonrefundable fee Rs.1000.00 on working days from 25.03.2021 to 07.04.2021 during 09:00am to 15:00pm on working days. The method of payment will be by cash.

06. Interested eligible bidders may obtain further information from the Official website of Northern Provincial Council (www.NP.gov.lk) and Provincial Director, Provincial Department of Agriculture,Northern Province, No.68, Crossette lane, Chundikuli, Jaffna.

**T/PNo. 021 221 6022 & 021 221 9027, Fax No. 021 221 9251**

07. Additional details are provided in the Bidding Data Sheet.

08. Dead line for the submission of bids shall be on 08th April 2021 at 15.00 hrs

09. Each Sealed Bids must be dispatched either by registered post or by hand to the address Provincial Director of Agriculture, Provincial Department of Agriculture,Northern Province, No.68, Crossette Lane, Chundikuli, Jaffna on or before 08th April 2021 at 15.00 hrs bid number must be written on the top of the envelop. Late bids will be rejected. Bids will be opened immediately thereafter. Bidders or their authorized representatives may be present at the time of opening bids.

10. All bids must be accompanied by a "bid security" which mentioned in the tender document. Any bid not accompanied by an acceptable bid security will be rejected.

11. The Chairman reserves the right to accept or reject or partially accept any bid and to annul the bidding process and reject all bids at any time without there by incurring any liability to the bidders.

**The Chairman,**
**Department Procurement Committee,**
**Provincial Department of Agriculture,**
**Northern Province,**
**No.68, Crossette Lane, Chundikuli, Jaffna.**

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியர் திரு. சுகந்தன் அவர்களின் அன்புத் தாயார்

**சிவஞானசுந்தரம் சறோஜினிதேவி**

அவர்கள் நேற்று (24.03.2021) புதன்கிழமை காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம்**
**யாழ்ப்பாண மத்திய கல்லூரி**

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
16 . 03 . 1970



அம்மாள் அரவணைப்பில்
05 . 04 . 2020

அமரர் துர்க்காதுரந்தரர்
**சண்முகராசா செந்தூரன்**

தேவருள்ளும் பூத்திருக்கும் தெய்வக்
குழந்தையாக வாழ்ந்தீர்கள்
தேனாகும்படி எங்களை ஊர் போற்ற
உற்சாகப்படுத்தினீர்கள்
மங்காத செல்வமோடு மனங்குளிர
தொண்டுகள் செய்தீர்கள்
மரண பயமின்றி வாழ்ந்த உங்களை
கவரச் செய்தது யார் விடை கூறுவீர்களா?
கண் இமைபோல் உங்களின் உருவம்
துடித்துக்கொண்டே இருக்கும்
எம் கண்ணீரையும் தாண்டி

துர்க்காபுரம்
மல்லாகம்.

அன்பு மனைவி
அன்புச் செல்வங்கள்

## கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் குளிரூட்டி பராமரிப்பு செய்வதற்கான கேள்விகோரல் 2021 -2022

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் 01.05.2021 தொடக்கம் 30.04.2022 திகதி வரையான காலப்பகுதிக்கு தகுதியான தகைமை வாய்ந்த கீழ் குறிப்பிடப்படும் சேவைகளுக்கான முத்திரையிடப்பட்ட பெறுகை களினை கோருகின்றார்.

| தொ.இல | பெறுகை இல | கேள்விகள் | உத்தரவாத வைப்பு பணம் |
|---|---|---|---|
| 01 | NP/DGH KOC/2021/AIR/05 | குளிரூட்டி பராமரிப்பு சேவை | 50,000.00 |

1. அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி சேவை வழங்கியிருப்பதோடு மூன்று வருட அனுபவத்துடன் வியாபார பதிவுச்சான்றிதழ் வைத்திருத்தல் வேண்டும்.
2. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலை அலுவலகத்தில் கிடைக்க பெறும் விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1,000.00 இனை செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 25.03.2021 தொடக்கம் 19.04.2021திகதி வரையான காலப்பகுதியில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
3. குளிரூட்டி பராமரிப்பு சேவைக்கான மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா 50000 வைப்புத்தொகை செலுத்தப்படாத கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4. விலைக்கேள்விகள் 20.04.2021ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக இம் மாவட்ட வைத்தியசாலையின் கணக்கு கிளையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்பிக்கப்பட வேண்டும். சமர்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும்.
5. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் மாவட்ட பொதுவைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல 0212285329, 0212284111) என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
6. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.


**தலைவர் பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**கிளிநொச்சி.**

# வடக்கு, கிழக்கு மாகாணங்களை சோமாலியாவாக மாற்ற முயற்சி

## கூட்டமைப்பு எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு,மார்ச் 25

**போரில் அழிவடைந்த வடக்கு,கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய அரசு, அவற்றைத் திட்டமிட்டுப் புறக்கணித்து வருகின்றது. சோமாலியா நாடு போன்ற தொரு நிலைமையை வடக்கு, கிழக்கில் ஏற்படுத்தும் முனைப்புக்களில் அரசு ஈடுபட்டுள்ளது.**



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சுங்கக் கட்டளைச் சட்டங்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்திலிருந்து பல கைத்தொழிற்சாலைகள், கைத்தொழில்பேட்டைகள் அழிக்கப்பட்டுள்ளன. ஆசியாக் கண்டத்திலேயே பெயர்போன சவளக்கடை அரிசி ஆலை இன்று இருந்த இடமே இல்லாது போயுள்ளது. அந்தப் பகுதியை அபிவிருத்தி செய்யும் நோக்கம் அரசுக்கு இல்லை. 68 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பைக் கொண்ட கட்டடங்கள் முன்னர் அங்கு இருந்தன. கடலை அண்டிய கப்பல் போக்குவரத்தும் இருந்துள்ளது. அவ்வாறான பிரபலமான அரிசி ஆலை அழிக்கப்பட்டுள்ள போதும், இன்னும் அது புனரமைக்கப்படவில்லை. இந்தப் போக்கு தொடர்ச்சியாக இருக்குமானால், தன்னிறைவு கொண்ட ஒரு நாடாக இலங்கை மாற முடியாது.

அம்பாறை மாவட்டத்தில் கரையோரப் பிரதேசங்களை மையமாக வைத்து இல்மனைட் அகழ்வு என்ற போர்வையில் சூழலுக்கு, மனித குலத்துக்கு பாதிப்பான செயற்பாடு களை அரசு கையாளுகின்றது.

இதுபோன்று திருக்கோவில் பிரதேசத்தை மையமாக வைத்து இல்மனைட் அகழ்வு செய்வதற்கான முன்முனைப்புக்கள் இடம்பெறுகின்றன.

இதற்கு எமது மக்கள் நீண்ட காலமாக எதிர்ப்புக்களைத் தெரிவித்து வந்துள்ளனர். பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும், திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வுக்கு அனுமதிப்பதில்லை என்ற ஏகோபித்த தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் அந்த இடத்தில் இல்மனைட் அகழ்வுக்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

திருக்கோவில் பிரதேசத்தில் புதிதாக இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகின்றன. போர் இல்லாத சூழலில் ஏன் புதிய இராணுவ முகாம்கள்?


மக்களுக்கு அபிவிருத்திகளைச் செய்ய வேண்டிய இந்த காலகட்டத்தில், இவ்வாறான இராணுவ முகாம்கள் அமைக்கப்படுவதன் நோக்கமென்ன? நாம் இந்த நாட்டில் அழிவைச் சந்தித்து வாழ முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த நிலையில் இவ்வாறான இராணுவ முகாம்கள் எமக்குத் தேவையா? பாடசாலையில் கூட இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

பொத்துவிலிலிருந்து பொலிகண்டி வரைக்கும் நடந்த எங்களது பேரணி தொடர்பில் தொடர்ச்சியாக இராணுவத்தினரும், பொலிஸாரும் எங்களது வீடுகளுக்கு வருவதும் விசாரணை செய்வதும் என எங்களைத் துன்புறுத்துகின்றனர். ஜனநாயகத்தை விரும்பாதவர்களே எங்களை அடக்கி ஆள விரும்புகின்றனர் - என்றார்.

(க-இ)

---

## 31 ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 23.02.2021 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

**அமரர்**

### காராளபிள்ளை பத்மநாதன் (குணம்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 23.03.2021 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. இன்று (25.03.2021) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் மதியம் 12.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**இல 49/5, யாழ் வீதி,
யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்



### திருமதி ஞானப்பூங்கோதை இராசரத்தினம்

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானப்பூங்கோதை இராசரத்தினம் அவர்கள் 23.03.2021 அன்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா வள்ளியம்மை தம்பதியினரின் இளைய மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் சின்னதங்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினம் (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கமலாவதி (கமலாலயம்), முதலித்தம்பி, பார்வதி, இராசமணி, குணரத்தினம் (மலேசியா), ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற பாலேந்திரன் மற்றும் குணேந்திரன், நந்தினி (ஜேர்மனி), சுகந்தினி (கனடா), ஜெயந்தினி (ஜேர்மனி), சாந்தினி (சிரேஷ்ட விரிவுரையாளர் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற திருஞானசோதி மற்றும் இரவீந்திரன் (ஜேர்மனி), சந்திரா (கனடா), ஜீவராஜா (ஜேர்மனி), ஞானசூரியர் (உள மருத்துவ சமூக சேவையாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், யதுபாலன் (பிரான்ஸ்), நிருபா (SOND), ஜனார்த்தன்-கார்த்திகா, காஞ்சனா, ரிஷிபாலன், லக்சனா, சிரோன், யதுஷனா, கஜன், கோகுல், இதபாசினி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), சாருஹாசினி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), நந்தேசன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), சிவரூபன் (இ.போ.ச கோண்டாவில்), அஜந்தினி (ஆயுள்வேத வைத்தியர்), ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், திவ்யரூபினியின் அன்பு பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.03.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**மு.சிவலிங்கம். (மருமகன்)**
**ஆதீனகர்த்தா**

**சிவகாமி அம்மன் கோயில்**
**இணுவில் கிழக்கு**

---

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
28 . 02 . 1948



**மறைவு**
24 . 03 . 2021

### சிவஞானசுந்தரம் சறோஜினிதேவி

**(உண்டுவத்தை, அல்வாய் தெற்கு, அல்வாய்)**

அல்வாய் தெற்கைச் சேர்ந்த திருமதி சிவஞானசுந்தரம் சறோஜினிதேவி அவர்கள் நேற்று (24.03.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானசுந்தரத்தின் பாசமிகு மனைவியும், சுகந்தனின் (ஆசிரியர், யாழ் மத்திய கல்லூரி) அன்புத் தாயாரும், கமலாதேவி, தங்கராஜா (கொழும்பு) ஆகியோரின் மூத்த சகோதரியும், றஜிதாவின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மதியம் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாமந்தரை பங்குவேம்படி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**077 115 1335**

**தகவல்:**
**சுகந்தன் (மகன்)**

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
10 . 10 . 1948



இறைவனடியில்
24 . 03 . 2021

# மயில்வாகனம் தனநாயகம்

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும் 8 ஆம் வட்டாரம் வேலணையை வதிவிடமாகவும், நல்லூர், கோண்டாவில் மேற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் தனநாயகம் நேற்று (24.03.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சபாரெட்ணம் - அன்னலெட்சுமி தம்பதியரின் மருமகனும், புஷ்பகாந்தி யின் பாசமிகு கணவரும், கதிர்காமநாதனின் அன்புச் சகோதரனும், விக்கினேஸ்வரன் (கனடா), விஜயகாந், ஜனனி (கொக்குவில் இந்து முன்பள்ளி - ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுபாஜினி, சுமதி, சுரேந்தன் ஆகியோரின் அன்பு மாமனும், ஜதுஷாலினி, பவிஷ்னா, நிருத்பவன் ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்றவர்களான நடராஜா, கருணை நாயகி, இராஜபூமனம், விமல நாதன் மற்றும் வசந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும், வினோதினி, மயூரன், லாவண்ஜா ஆகியோரின் சிறியதந்தையும், விஜயலெட்சுமி, வினோதா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாடசாலை வீதி,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
15 . 08 . 1961



இறப்பு
23 . 02 . 2021

# அமரர் யோசெவ் அல்போன்ஸ் மரியசெல்வம்

அடியவர்கட்கு அண்ணாவாக பிறந்தீர்கள்
ஆண்டவரிடம் பரிந்துரைக்கவோ விண்ணகம் சென்றீர்கள்
இறைவனிடம் மன்றாடுவோம் நித்திய வாழ்வுக்காக
ஈகையில் ஆர்வம் கொண்டீர்கள்
உண்மையில் சாட்சியாக வாழ்ந்தீர்கள்
ஊழல் களைவதில் மகிழ்ச்சி அடைந்தீர்கள்
எல்லோரிடமும் ஒற்றுமையாய் வாழ்ந்தீர்கள்
ஏழைகளில் அன்பு வைத்தீர்கள்
ஐ பன்னிரு ஆண்டு வாழ்ந்தீர்கள்
ஒற்றுமையாய் எல்லோரிடமும் வாழ்ந்தீர்கள்
ஓரம் இன்றி வாழ்ந்தீர்கள்.
ஔடத மானீர்கள் மக்களுக்கு
அஃதே வாழ்ந்தீர்கள் நல்வாழ்வு

அன்னாரின் 31 ஆம் நாள் நினைவு தினமான இன்று (25.03.2021) வியாழக்கிழமை அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக **நவாலி புனித பேதுறுபாவுலு ஆலயத்தில்** முற்பகல் 10.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் அதன்பின்னர் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்தில் கலந்து பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**அரசடி வீதி,**
**நவாலி தெற்கு, மானிப்பாய்.**

**திருமதி.யோ.ஜெயசீலி**
**புனிதமலர் குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# திருமதி பிரபாலினி வரதராஜன்

(MED, BED (Primary) Primary Trained)
ஆசிரியர், பகுதித் தலைவர், யா / இந்து ஆரம்பப் பாடசாலை)



சாவகச்சேரி மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரபாலினி வரதராஜன் கடந்த ஞாயிற்றுக்கிழமை 21.03.2021 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தசாமி - சிவஞானம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லத்துரை - சேதுப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும், வரதராஜன் அவர்களின் அன்பு மனைவியும், உமையாள் (மருத்துவபீட மாணவி, பங்களாதேஸ்) அவர்களின் ஆருயிர் தாயாரும், சுபாஸ்கரன் (பிரான்ஸ்), சுரேஸ்கரன் (நோர்வே), சுதேஸ்கரன் (ஆசிரியர் யா/ மீசாலை விக்னேஸ்வரா ம.வி), சுபாலினி (ஆசிரிய ஆலோசகர் வவு. வடக்கு வலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, திலகவதி, ராஜலக்ஸ்மி, சாந்தநாயகி, கமலாம்பிகை (லண்டன்), புவனேஸ்வரி (ஆசிரியை - யா / நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வி), லதா (பிரான்ஸ்), திலகா (நோர்வே), சு.தேவரதி (பிரதி அதிபர் யா/ ஹிறிபேக் கல்லூரி - சாவகச்சேரி), வசந்த குமார் (துபாலகம் வவுனியா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2021) வியாழக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் (இல. 138/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்) இடம்பெற்று தகனக் கிரியைகளிற்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கோட்டுக் கொள்கின்றோம்.

**138/1, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

புத்தாண்டு விசேட தள்ளுபடி

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்

**கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T –சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புறொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்.**




அனைத்து வாடிக்கையாளர்களும் சுகாதார நடைமுறைகளை பேணவேண்டும்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**
**காலம்: 20.03.2021 - 13.04.2021 வரை**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 22 . 11 . 1940



மறைவு 25 . 02 . 2021

கடந்த 25.02.2021 அன்று காலமான
எமது குடும்பத் தலைவர்

## அமரர் செல்லையா மகாதேவா


அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (25.03.2021) வியாழக்கிழமை யாழ். வீதியில் அமைந்துள்ள இல்லத்திலும். அந்தியேட்டிக் கிரியைகள் 27.03.2021 சனிக் கிழமை அவரது இல்லத்திலும் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

அத்துடன் 25.02.2021 அன்று காலமான எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து வந்து உதவி செய்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரி வித்துக்கொள்கின்றோம்.

**30, யாழ்வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

# 29ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் காசிப்பிள்ளை சபாரத்தினம்

தோற்றம் 10.05.1926

மறைவு 15.03.1992

**திதி:– 25.03.2021 (துவாதசி)**

எம்மை விட்டுப் பிரிந்து இருபத்தொன்பது
ஆண்டுகள் சென்றாலும் – கருணை
உள்ளங்கொண்ட எமது அன்புக்குரிய
பப்பா! உங்களை என்றென்றும்
மறவோம்.

**என்றும் உங்கள் நினைவில்**
**குடும்பத்தினர்.**
**சுன்னாகம் தெற்கு,**
**சுன்னாகம்.**

# St. John's College, Jaffna

## Old Boys' Association

**ANNUAL GENERAL MEETING**

The 104th Annual General Meeting of the Old Boys' Association of St. John's College, Jaffna will be held on Saturday 10th April, 2021 at 10:00 am in the Peto Memorial Hall.

PROGRAMME FOR THE DAY
09:00 am - Holy Communion Service
10:00 am - Annual General Meeting

**AGENDA**

1) Prayer
2) Vote of Condolences
3) Minutes of Last AGM
4) Principal's Review
5) Annual Report
6) Statement of Accounts
7) Amendment of Constitution
8) Election of Executive Committee

12:30 pm - Fellowship Lunch
04:00 pm - Principal's Tea
04:30 pm - Soccer Match (Old Boys vs Present Boys)

**Kindly accept this invitation as no individual invitations will be sent.**

Members who wish to submit resolutions are kindly requested to do so in writing on or before 05th April, 2021.

Lunch Tickets will be available at the entrance.

| | | |
|---|---|---|
| Mr. V. S. B. Thuseetharan | Dr.U Mayorathan | Mr. T. Pradheeban |
| **Principal.** | **President** | **Secretary** |

# 7ஆம் ஆண்டு நினைவலைகள்

## திருமதி ஜெயவதனி ஞானேந்திரன் (பபி)

மலர்வு 03 . 08 . 1967

உதிர்வு 11 . 04 . 2014



திதி : 25.03.2021 ஏகாதசி

ஆண்டு ஏழாயிடினும் நேற்றுப் போலிருக்கின்றது
நெஞ்சமெல்லாம் உன் நினைவுகள்
ஆற்றுவார் யாருமின்றி அழுத கண்கள் வற்றிவிட
தோற்றுப் போய் துவண்டிங்கு
துடித்திதயம் கலங்கி நிற்க
வேற்றுலகம் சென்று உமை வேலவனார் காத்திருப்பார்
என்றெண்ணி இறைவனை நிதம் பிரார்த்திக்கின்றோம்

**அம்மா, கணவர், தம்பி**
**பிள்ளைகள், - பிரணவன்,**
**பிரியந்தினி**

**கிளானை**
**கொல்லங்கலட்டி**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 02 . 1952



மறைவு 24 . 03 . 2021

### திருமதி கனகரத்தினம் கனகேஸ்வரி (கனகம்)

உடுவில் காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும், சில்லாலை வீதி பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் கொண்ட கனகரத்தினம் கனகேஸ்வரி அவர்கள் நேற்று (24.03.2021) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், கலஞ்சென்றவர்களான கந்தையா வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், திருச்செந்தூரன், திருமாலினி, துவாரகா, சோபிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், மிதுலாயினி, சத்தியநாதன், குணசீலன் ஆகியோரின் அன்பு மாமியும், ஆருஷன், ஹாசினி, ஆரபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கந்தசாமி, கிருபாசக்தி, கமலேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பரமசாமி, பரமேஸ்வரி, மாரிமுத்து, மற்றும் நல்லம்மா, காலஞ்சென்ற நவமலர் மற்றும் மங்களேஸ்வரி, குகதாசன், இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2021) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சில்லாலை வீதி,**
**பண்டத்தரிப்பு.**
**செந்தூரன் (மகன்) 0033 778672372**
**சீலன் (மருமகன்) 077113 0048**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### அமரர் தம்பிப்பிள்ளை கணேசலிங்கம்

**தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்**
**(T.K.T MARK- உரிமையாளர் நல்லெண்ணை)**

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை கணேசலிங்கம் நேற்று (24.03.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் நல்லம்மா தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சண்முகநாதன், அன்னலக்சுமி மற்றும் கதிரேசு ஆகியோரின் பெறாமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கிருஸ்ணவாணி, கணேஸ்வரன், மகேஸ்வரன், தர்மேஸ்வரன், கலைவாணி, தணிஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கினேஸ்வரனின் அன்பு மாமனாரும், கணேஸ்வரி, கமலாம்பிகை, தில்லையம்பலம், கனகாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற ரவீந்திரநாதன் மற்றும் குணரத்தினம், பஞ்சலிங்கம், காலஞ்சென்ற இன்பராணி ஆகியோரின் மைத்துனரும், சுதர்சன், சுரேசன், சுதர்சினி, சண்முகப்பிரியா, கிசாந்தி, சுதர்சன், சிவரூபினி, சிவதாரணி, சிவராகினி, சாருகா, சானுஜன் ஆகியோரின் அன்புத் தாய்மாமனும், செல்வக்கணேஸ், செந்தூரன், செந்தாயினி, செயந்தினி, றஜிதா ஆகியோரின் பெரியதந்தையும், அஷ்வினி, ஐஸ்வர்யா, அஸ்மிகா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் சிவசம்பு, கந்தையா ஆகியோரின் மருமகனும், இராசமணியின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2021) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு மு.ப 11.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சோமசுந்தரம் வீதி,**
**ஆனைக்கோட்டை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் . 14 . 08 . 1962



மறைவு . 23 . 03 . 2021

### முருகேசு ஸ்ரீஸ்கந்தவேல்

**(முன்னாள் மாநகர சபை ஊழியர்)**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் இருபாலை கிழக்கை வதிவிட மாகவும் கொண்ட முன்னாள் மாநகரசபை ஊழியரான முருகேசு ஸ்ரீஸ்கந்தவேல் கடந்த (23.03.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்கள் முருகேசு இராசம்மா தம்பதியரின் மகனும், அமரர் நடராசா செல்வரத்தினம், தம்பதியரின் மருமகனும், சந்திரவதனியின் அன்புக் கணவரும், மதுசாலினியின் அன்புத் தந்தையும், ஸ்ரீஸ்கந்தராசா (ஜேர்மனி), சரோஜா, கிரிஜா, விஜயா (லண்டன்), தனுஷ், சண்முகவடி வேல் (லண்டன்), ரத்தினவடிவேல் ஆகியோரின் சகோதரனும், சந்திர தாசன், குகதாசன், விஜயதாசன், சிவதாசன், சாந்தவதனி, ஜெயதாசன், கிரிதாசன் ஆகியோரின் மைத்துனரும், சஜீவன், கஜீவன், சுஜீவன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், கௌரி, தாரணி, குண சேகரம், சசி, மருதமுத்து ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2021) வியாழக்கிழமை மதியம் 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் இருபாலை கிழக்கு நொச்சிக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

மலர்வு 15 . 10 . 1943



உதிர்வு 22 . 03 . 2021

### திருமதி மேரிதிரேசா வின்சஸ்லோஸ்

**(யோகரட்ணம் - யோகா)**

யாழ். இளவாலையைப் பிறப்பிடமாகவும், யாழ். அச்சுக்கூட வீதி, பிரதான வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. மேரி திரேசா வின்சஸ்லோஸ் (யோகா) அவர்கள் 22.03.2021 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - நேசம்மா தம்பதிகளின் அன்பு புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஜோசப் அன்னம்மா தம்பதிகளின் அன்புமருமகளும், காலஞ்சென்ற ஜோசப் புஸ்பராஜா வின்சஸ்லோஸ் அவர்களின் அன்பு மனைவியும் Bernadine Vinothini (Australia), Bettina Eshanthini (Norway), Polinus Jehan (London) ஆகியோரின் பாசமிகு தாயாரும், Johnson Jesuthasan (Australia), Roy Kengakaran (Norway), Tharany (London) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற ஜோர்ச் ராஜேஸ்வரி (பேபி - பிரான்ஸ்), அன்ரன் ஜோசப் (ஜெயராஜா - பிரான்ஸ்), ஜேசுதாசன் (செல்வராஜா - கனடா), பத்திநாதர் (ஜோகராஜா - கனடா), பெனடிற் (பேபிராஜா - இலங்கை), விமநாதன் (ராஜன் - பிரான்ஸ்), காலஞ் சென்ற புஸ்பராணி (மலர் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரியும், Angelo, Jeramy, Jayden, Jovitta, Patricia ஆகியோரின் அன்பு பேர்த்தியும்ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக இன்று (25.03.2021) வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல் 2.30 மணி வரை பிரதான வீதியில் அமைந்துள்ள White House மண்டபத்தில் வைக்கப்பட்டு பின்னர் 3.00 மணிக்கு யாழ் தூய மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**மகள் - Bernadine Vinothini (Australia)**
**மகள் - Bettina Eshanthini (Norway) - 004740604446, 0773771473**
**மகன் - Polinus Jehan (London) - 00447985124608**

## இலங்கைக்குள்...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 9 பேரடங்கிய குழுவினர் சாட்சியங்களை திரட்ட இலங்கை செல்லவேண்டும் என பிரேரிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவினருக்கு அனுமதி வழங்கப்படுமா? என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் பொருளாதாரத் தடை விதிக்க முடியாது. மனித உரிமைகள் பேரவையில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையால் தனிப்பட்ட ரீதியில் பேரவையால் சில நாடுகளுக்கு இதனை வலியுறுத்த முடியும். ஆனால் இவ்வாறான தடை விதிக்கப்பட வேண்டுமாயின், ஜக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையிலேயே இதுதொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ள வேண்டும். பாதுகாப்பு சபையில் வீட்டோ அதிகாரத்தை கொண்ட பல நாடுகள் உள்ளன. அவை எமக்கு ஆதரவு வழங்கும்.

இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் இன்னும் உரிய வகையில் நிரூபிக்கப்படவில்லை. அதனையே இன்றும் வலியுறுத்துகின்றோம்.

யுத்தம் நடைபெற்ற 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை தொடர்பாக இலங்கை பிரிட்டிஷ் தூதரகத்தின் பாதுகாப்பு பிரிவு அதன் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைத்த தகவல்கள் முரண்பாட்டை கொண்டுள்ளன என பிரபு நேஸ்பி தெளிவுபடுத்தியுள்ளார்.

6 மாத கால தகவல்களை இவர் ஆய்வு செய்து அதில் முரண்பாடு இருப்பதை வெளிப்படுத்தி இருந்தார். அமெரிக்க பிரதிநிதி ஒருவரும் இந்த அறிக்கை பக்கசார்பானது என்று அப்பொழுது குறிப்பிட்டிருந்தார்.

இதேபோன்று அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு பிரிவின் அதிகாரி கேணல் ஸ்மித்தும் இந்த முரண்பாடுகளை வெளிப்படுத்தியிருந்தார். இலங்கைக்கு எதிராக அக்கால பகுதியில் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அனுசரணை வழங்கிய அமெரிக்காவும் அதிலிருந்து விலகிக் கொண்டது.

இந்நிலையில் இலங்கைக்கு எதிரான விடயங்களை ஆராய்ந்து சரியானவற்றை முன்வைப்பதற்கு இலங்கை தற்பொழுது நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.' என்றார். (ம-44)

## மூடப்பட்டது...

மூடப்பட்டது. வடமாகாணத்தில் நேற்று 44 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில் 24 பேர் திருநெல்வேலி பொதுச் சந்தை வியாபாரிகள். எழுமாற்றுப் பரிசோதனைகளிலேயே அவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து திருநெல்வேலி பொதுச் சந்தை மறுஅறிவித்தல் வரும் வரையில் மூடப்பட்டது.

திருநெல்வேலி சந்தைத் தொகுதி வியாபாரிகள் மற்றும் அங்கு பணியாற்றுபவர்கள் தம்மை சுயதனிமைப்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்கள் தமது விவரங்களை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியிடம் பதிவு செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-26)

## வடக்கில்...

நேற்றுப் புதன்கிழமை கண்டறியப்பட்டது. அவர்களில் 24பேர்திருநெல்வேலி சந்தைத் தொகுதி வியாபாரிகள் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடம் ஆகியவற்றில் 284 பேரின் மாதிரிகள் நேற்றுச் சோதிக்கப்பட்டன. இதிலேயே 44 பேருக்குத் தொற்றுள்ளது என்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட திருநெல்வேலியைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நல்லூர் திருநெல்வேலி சந்தைத் தொகுதியில் எழுமாறாக சிலரிடம் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டதில் 24 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் மரக்கறி வியாபாரிகள் மற்றும் சந்தைத் தொகுதியில் உள்ள கடைகளின் வியாபாரிகளும் அடங்குகின்றனர்.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் மண்டைதீவுக்கு கடலுணவு வாங்குவதற்காகச் சென்றவர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 3 கைதிகளுக்கு கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மருத்துவபீட மாணவன் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் மூவர் புதுக்குடியிருப்பிலும் இருவர் மல்லாவியிலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள்.

கிளிநொச்சி பளையில் 4 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் நால்வரும் சுயதனிமைப்ப டுத்தப்பட்டிருந்தவர்கள். வவுனியா பொது மருத்துவமனையில் இரண்டு பேருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்' - என்றார். (ம-26)

## கொரோனாவால்...

கப்பட்டார். அவருக்கு அன்ரிஜென் பரிசோதனை மேற்கொண்டதில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து மேலதிக சிகிச்சைக்காக அவர் அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்தார். குறித்த நபருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலும் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-110)

## முதல்வர்...

டைய பிரமுகர்கள் பலர் தனிமைப்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர், சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனுக்கு கொரோனாத் தொற்றுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து கடந்த 20ஆம் திகதிக்குப் பின்னர் தன்னுடன் நேரடித் தொடர்புகொண்டவர்கள் தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும் என்று மணிவண்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையிலும், நீதிமன்றத்திலும் மணிவண்ணனுடன் கடந்த ஒரு வாரத்துக்குள் தொடர்பு கொண்டவர்களை, அடையாளப்படுத்தி தனிமைப்படுத்தும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. தனிமைப்படுத்தப்பட்டவர்களின் விவரங்களும், அவர்களின் கொவிட் வலைப்பின்னலும் இன்று வெளியாகும் என்றும் கருதப்படுகின்றது. (ம-26)

## ஜெனிவா...

நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்றும் எதிர்காலத்தில் இலங்கையால் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் மேற்படி உரையின்போது வெளிவிவகார அமைச்சர் தெளிவுபடுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின் றது.

ஐ.நா. தீர்மானத்தை இலங்கை நிராகரித்துள்ள நிலையில், அதன் அடுத்த கட்ட நகர்வுகள் என்ன என்பது தொடர்பிலும் வெளிவிவகார அமைச்சர் விளக்கமளிப்பார் என்று தெரியவருகின்றது. (ம-ஒ,44)

## மனங்களில்...

யல் திணைக்களம் திட்டமிட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த மூன்று நாள்களாக அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர்.

வடக்கு மாகாண தொல்லியல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அடங்கிய குழுவினர் நேற்றுக் காலை 11 மணியளவில் ஆலயத்துக்குச் சென்று ஆய்வுப் பணிகளை ஆரம்பிக்க முயற்சித்தனர். பொதுமக்கள் அவர்களின் வாகனத்தை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அகழ்வுப் பணிக்கோ, ஆராய்ச்சிக்கோ இடமளிக்க முடியாது என்று அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தனர். இதனையடுத்து தொல்பொருள் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர். 'வரலாற்றை மாற்றாதே', 'மனங்களில் புத்தரை தேடு. மண்ணில் புத்தரை தேடாதே', 'எங்களது சிவன் எங்களுக்கு வேண்டும்' போன்ற கோசங்களை எழுப்பியவாறு பொதுமக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டமை குறிப்பி டத்தக்கது. (ம-ஒ,214,113,6)

## வங்கிக்...

பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

வவுனியா - வேப்பம்குளத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞனின், தனியார் வங்கிக் கணக்கு இலக்கம் ஒன்றுக்கு அமெரிக்காவிலிருந்து ஒரு கோடியே இரண்டு லட்சத்து 58 ஆயிரத்து 399 ரூபா பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர், சந்தேக நபரான இளைஞர், ஏனைய நபர்களின் வங்கிக் கணக்குகளுக்குள் அத்துமீறி பிரவேசித்து பண மோசடி செய்துள்ளார் என்று கண்டறிந்துள்ளனர். இதனையடுத்து இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (க-110)

## விக்னேஸ்வரனை...

அடிப்படையாகக் கொண்டு, அவருக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டம், சிவில் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச இணக்கப்பாட்டுச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டக் கோவை ஆகியவற்றின் கீழ் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர். அத்துடன் 'பி' அறிக்கையையும் தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம், தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்று விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இனங்களிடையே, நாட்டில் குழப்பத்தைத் தோற்றுவிக்கும் வகையில் அமைந்துள்ளன என்று சட்டத்தரணி ஒருவர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை தொலைக்காட்சி நேர்காணலின் செம்மைப்படுத்தப்படாத பிரதியைப் பெற்றுக்கொள்வதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு முன்வைத்த கோரிக்கைக்கு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (ஒ,கஇ)

## மரம்...

குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். குறித்த நபர் மரம் அறுக்கும் தொழில் செய்பவர். தனது தொழில் நிமித்தம் பணியாற்றிக் கொண்டிருந்தபோதே மரம் வீழ்ந்து அவர் உயிரிழந்தார்.

முள்ளியவளைஐயனார்குடியிருப்பைச் சேர்ந்த சொக்கன் (வயது 42) என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்து குறித்து முள்ளியவளை பொலிஸார் விசாரணையை முன்னெடுத்தனர். (ம-19)

## மன்னாரில்...

யில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை உருக்குலைந்த நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது. இச் சடலம் கடந்த மாதம் காணாமல் போன 37 வயதுடைய நபருடையதாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. எனினும் அது உறுதிசெய்யப்படவில்லை.

குறித்த பகுதியில் மாட்டைத் தேடிச் சென்ற நபரே மேற்படி சடலத்தை அவதானித்துள்ளார்.

இதையடுத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை தடயவியல் நிபுணர்களும், சட்ட மருத்துவ அதிகாரிகளும் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

மன்னார் தோட்டவெளிப் பகுதியைச் சேர்ந்த நபரொருவர் கடந்த மாதம் 7ஆம் திகதி காணாமல் போயிருந்தார். அவர் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் இந்த சடலம் காணாமல் போனார் என்று சொல்லப்படும் மேற்படி நபருக்கு உரியதாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டுள்ளது. (ம-56,60)

© 2000 Agfa-Gevaert N.V.

# காடழிப்புக்கு எதிராக முல்லையில் போராட்டம்

முல்லைத்தீவு, மார்ச் 25

**காடழிப்புக்கு எதிராக நாடாளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**



முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி வளாகத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் காலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. "இலங்கை முழுவதும் வனப்பகுதிகள் அழிக்கப்படுவதை முடிவுக்கு கொண்டு வாருங்கள்", "யானைகள் மற்றும் வனவிலங்குகளின் கொலைகளில் தலையீடு செய்யவும்" மற்றும் "சுற்றுச்சூழல் அழிவுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் இளையோருக்கு எதிரான துன்புறுத்தல்கள் நிறுத்தப்பட வேண்டும்" ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ-19)

## மன். ரயில் – பேருந்து விபத்து; சந்தேக நபர்களுக்கு பிணை

மன்னார், மார்ச் 25

கடந்த வாரம் தலைமன்னார் பியரில் இடம்பெற்ற ரயில் மற்றும் பேருந்து விபத்துச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பேருந்தின் சாரதி மற்றும் ரயில் கடவைக் காப்பாளர் ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் தலைமன்னார் பியரில் ரயில்வே கடவையில் மாணவர்கள், பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து ஒன்று ரயிலுடன் மோதுண்டு விபத்துக்கு உள்ளானதில் பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்ததுடன், 24 பேர் படுகாயமடைந்தனர்.

விபத்துத் தொடர்பாக தனியார் பேருந்தின் சாரதியும் விபத்து நடந்த பகுதியிலுள்ள ரயில்வே கடவை காவலரும் தலைமன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

வழக்கு நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது இரு சந்தேகநபர்களையும் தலா இருவர் கொண்ட பிணையில் விடுவித்த நீதிவான், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தலைமன்னார் பொலிஸில் கையொப்பம் இட வேண்டும் எனக் கட்டளையிட்டார். (ப-60)

## குற்றச்செயல்களை கட்டுப்படுத்த சந்திகளில் சிசிரிவி

வவுனியா, மார்ச் 25

குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் வவுனியா நகரின் முக்கிய சந்திகளில் மறைகாணி (சிசிரிவி) பொருத்தும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் வர்த்தகர்களின் பங்களிப்பில் குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (ஐ-110)

## கரியாலை நாகபடுவானின் கீழ் 561 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை



கிளிநொச்சி, மார்ச் 25

கிளிநொச்சி, பூநகரி, கரியாலைநாகபடுவான் குளத்தின் கீழ் 561 ஏக்கர்களில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான கூட்டம் நேற்று முன்தினம் பூநகரி பிரதேச செயலாளர் ச.கிருஸ்ணேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்படி, 561 ஏக்கரில் நெற்செய்கையும் 50 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கையும் மேற்கொள்வது என கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த பல ஆண்டுகளாக கரியாலைநாகபடுவான் குளம் முழுமையாகப் புனரமைக்கப்படவில்லை எனவும், இக்குளத்தின் கீழான வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாறி வருகின்றன எனவும், இவ் விடயங்களைக் கருத்திற்கொண்டு குளத்தின் முழுமையான அபிவிருத்தி, உவர்ப் பரம்பலைக் கட்டுப்படுத்தும் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும் கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (வ-13)



*30 ஆண்டுகளின் பின்னர்*

## குருந்தூர் குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை!

முல்லைத்தீவு, மார்ச் 25

குமுளமுனை கமநல சேவை நிலையத்தின் கீழ்வரும் தண்ணிமுறிப்பில் குருந்தூர் மலையின் கீழ் உள்ள குருந்தூர் குளத்தின் மூலம் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள குருந்தூர் குளம் கடந்த 30 ஆண்டுகளாக சீரமைக்கப்படாமல் இருந்தது. தற்போது கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 10 மில்லியன் ரூபா நிதியுதவியில் குறித்த குளம் சீரமைக்கப்பட்டு விவசாயிகளின் சிறுபோக செய்கைக்கான நீர் திறந்துவிடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதன்போது குமுழமுனை கமநலசேவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், கமக்கார அமைப்பினர் மற்றும் விவசாயிகள் ஆகியோர் வழிபாடுகளை மேற்கொண்டு பொங்கல் பொங்கி நீரைத் திறந்து விட்டனர்.

குறித்த பகுதியில் ஏற்கனவே சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், குருந்தூர் குளத்தை நம்பி சுமார் 60 ஏக்கர் வரையில் விவசாயிகள் நெற்செய்கையை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர். (ஐ-19)


### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி, கோண்டாவில் கொட்டைக்காடு வீதியில் 10 ½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
1 ½ பரப்பாக பிரித்து கொடுக்கப்படும்
(பலாலி வீதியிலிருந்து 120M தூரம் காணி உள்ளது)

தொடர்பு: - 077 623 4204
077 505 8561
077 235 2656

### யாழ்ப்பாணத்தில் உடனடி வேலைவாய்ப்பு

**R.I.B GROUP (PVT) ltd நிறுவனத்தில்**

**கணக்காளர் :** Accountant - Full Time வியாபார கணக்கியலில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
**உதவி கணக்காளர் :** Assistant Accountant - Full Time குறித்த துறையில் ஒரு வருட அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
**சாரதி :** கனரக வாகனம் (Heavy Vehicle)

உரிய ஆவணங்களுடன் சமூகமளிக்கவும்.

**நேர்முகத் தேர்வு : 2021 மார்ச் 27 சனிக்கிழமை**
**இடம் : 83, காதி அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்**
**(கதீஜா மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)**
**நேரம் : முற்பகல் 10.30 மணிக்கு**

**தொலை பேசி இலக்கம் : 077 388 3879, 076 138 9356**

### கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் ஆசிரியை



**திருமதி**
**பிரபாலினி வரதராஜன்**

(S.L.T.S. - I, PrimaryTrd, B.Ed, M.Ed)

இடி ஒன்று விழுந்திருந்தால் தலையைக் கொடுத்து
- இருப்போம்
மலை ஒன்று சரிந்து இருந்தால் நெஞ்சை நிமிர்த்தி நிற்போம் - ஆனால்
கல்வித் தூண் அல்லவா சரிந்தது. நாம் என் செய்வோம்
காலன் அவன் கைகவரும் நேரம் இதோ
கதறி மனம் துடிக்கின்றோம் வேதனையில் கவி வடிக்க
கண்ணீரில் நனைகின்றோம் காற்புள்ளி போட்டு விட்டு
கடவுளிடம் வேண்டுகின்றோம் - உங்கள்
ஆத்மா அமைதியாக சாந்தி பெற

**தரம் 5 F பிரிவு மாணவர்களும் , பெற்றோர்களும்**
**யாழ் இந்து ஆரம்ப பாடசாலை**




உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் ... அவர்களது பணிமனையில் 25.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.